# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜனவரி 2008 ஜீவியம் 13 மலர் 9

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்

*பக்கம்*

| | |
|---|---|
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 2 |
| வல்லுநர்கள் | 4 |
| லைப் டிவைன் | 8 |
| இம்மாதச் செய்தி | 20 |
| நல்லவர்கள் ஏன் சிரமப்படுகிறார்கள்? | 21 |
| சாவித்ரி | 24 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 26 |
| லைப் டிவைன் - கருத்து | 32 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 34 |
| அஜெண்டா | 40 |
| அன்பர் கடிதம் | 42 |
| அற்புத குழந்தை | 46 |
| யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 59 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

### ஜீவியத்தின் ஓசை

✡ பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஜோதி அறிவுக்குரியது.

✡ புத்தகம் அறிவைத் தாங்கி வருவது.

✡ புத்தக சேவை ஸ்ரீ அரவிந்த ஜோதிக்குரிய சேவை.

✡ சித்தி மனித முயற்சி; அருள் தெய்வ அனுக்கிரஹம்.

✡ மனித முயற்சி முடியுமிடத்தில் தெய்வ அருள் செயல்படும்.

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும், ஸ்ரீ அரவிந்தமும்

கர்மயோகி

நம் வாழ்வு முழுவதும் நம் பழமொழிகளால் பிரதிபலிக்கப்படுகிறது. அவற்றுள் பலவற்றை எடுத்து, அதற்குரிய அன்னை கருத்தை எழுதி உள்ளேன். சில ஒன்று போலிருக்கும். மற்றவை எதிர்மாறாக இருக்கும். ஒரு சில முற்றிலும் மாறியிருக்கும். நம் வழக்கிலுள்ள கருத்திற்குப் பொருத்தமான அன்னை கருத்தை எழுதுவதே என் நோக்கம்.

1. **கெஞ்சினால் மிஞ்சுவது; மிஞ்சினால் கெஞ்சுவது.**

   ❈ காரியம் ஆகும்வரைக் காலைப் பிடிப்பது; காரியம் ஆனபின் சிண்டைப் பிடிப்பது.

   ❈ அய்யோ பாவம் என்றால், ஆறு மாதத்துப் பாவம் கையோடு வரும்.

   ❈ தீட்டிய மரத்தில் கூர் பாய்வது.

   ❈ பரோபகாரம் படு அபசாரம்.

2. **ஆவாதவன்தான் ஆபத்திற்கு உதவுவான்.**

   ❈ முரண்பாடே உடன்பாடு.

3. **கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன், வானம் துறந்து வையகம் காட்டுவானா?**

   ❈ சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றாதவன், யோகத்தில் சாதிக்க முடியுமா?

4. **தர்மம் தலை காக்கும்.**

   ❈ அழைப்பை அருள் தவறாது ஏற்கும்.

5. **தானாடாவிட்டாலும் தன் தசையாடும்.**

   ❈ நீ மறந்தாலும், நின் அருள் மறவாது.

6. **பட்ட காலிலே படும்; கெட்ட குடும்பமே கெடும்.**



   ❈ அதிர்ஷ்டம் வரும்பொழுது அனைத்து திசையிலிருந்தும் வரும்.

7. **தோட்டத்துப் பச்சிலைக்கு மரியாதையில்லை.**

   ❈ மனிதன் unconsciousஆக இருக்கிறான்.

8. **30 வருஷம் வாழ்ந்தவனுமில்லை; 30 வருஷம் கெட்டவனுமில்லை.**

   ❈ என் மீது கோபப்படாதவர் ஒருவருமில்லை.

9. **மனமிருந்தால் மார்க்கமுண்டு.**

   ❈ வேண்டும் என்பதை மனிதன் சாதிப்பான்.

10. **தைரியலக்ஷ்மி உள்ள இடத்தில் மற்ற எல்லா லக்ஷ்மிகளும் வருவர்.**

    ❈ சமர்ப்பணம் உள்ள இடத்தில் எல்லாக் காரியங்களும் நிறைவேறும்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நினைவே ஒரு செயலைத் தீமையாக்குவது; அல்லது தீமையாகக் காண்பிப்பது. செயலில் தீமையில்லை. செயல், வெறும் செயலாகும்.

***தீமை செயலில்லை; நினைவிலுள்ளது.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதனுக்கு விஸ்வாசமில்லை. நம்முள் உள்ள தெய்வ அம்சத்தாலேயே விஸ்வாசத்தை உணர முடியும்.

***விஸ்வாசத்தை உணர முடியாத மனிதன்.***

## வல்லுநர்கள்

**N. அசோகன்**

தனி மனிதருடைய ஆன்மீக நம்பிக்கைஎன்பது வல்லுநர்களால் பொதுப்படையான அறிவாக மாற்றப்படுகிறது. நம்பிக்கைஎன்பது ஆன்மாவினுடைய அறிவாகும். காலப்போக்கில் இந்த ஆன்மாவின் அறிவாவது மனதின் அறிவாக மாறுகிறது. இப்படிப்பட்ட அறிவைப் பெற்றவர் சான்றோராகவும், மேதாவியாகவும் மாறுகிறார். வல்லுநர்கள் இந்தத் தனிப்பட்ட மனிதனின் அறிவை சமூகத்தின் பொதுவுடைமை ஆக்குகிறார்கள். ஒரு சிவனடியார் ஒரு சிவபக்தரின் வீட்டிற்குச் சென்ற பொழுது, அந்த சிவபக்தரின் மகன் பாம்புக் கடிபட்டு இறந்திருந்தான். உடனே சிவனடியார் சிவபெருமான் மேல் ஒரு பதிகம் பாடி அப்பையனை உயிர்ப்பித்தார். அடிகளார் பாடும் பதிகத்தை மாந்திரீகர்கள் மந்திரங்களாக மாற்றி உயிரைக் காப்பாற்றுகிறார்கள். காலப்போக்கில் மந்திரம் ஓதுதல் என்பது மருத்துவர்கள் மூலமாக எல்லோருக்கும் பயன்படக்கூடிய மருந்தாக மாறிவிடுகின்றது. பாம்புக்கடியால் இறந்தவரை உயிர்ப்பிக்கும்பொழுது இந்த ஆற்றல் விசேஷமாகத் தெரிகிறது. ஆனால், மருந்து என்ற நிலைக்கு வரும்பொழுது இந்த பிரார்த்திக்கும் ஆற்றல் மருந்தின் மூலம் அறிவு சார்ந்த ஆற்றலாக மாறுகிறது. ஒரு காலத்தில் கவித்திறன்என்பது ஒரு தெய்வீகத் திறனாகக் கருதப்பட்டது. ஆனால், இன்று சமூகம் கல்வித் திட்டங்களின் மூலம் இந்தக் கவித்திறனை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பை எல்லோருக்கும் வழங்குகிறது. எழுதும் திறனை வளர்த்துக்கொண்டே ஆக வேண்டும்என்று கட்டாயப்படுத்தும் நிலைக்குக்கூட இன்று சமூகம் வந்து விட்டது.

பழங்காலத்தில் நீதி வழங்குவதுகூட ஒரு தெய்வீகத் திறனாகக் கருதப்பட்டது. மனுநீதிச் சோழனுடைய காலத்தில் ஒரு பசுவிற்குக்கூட நீதி கிடைத்தது. தெய்வீகக் குணங்கள் படைத்த அரசனால்தான் இப்படிப்பட்ட நீதியை வழங்க முடிந்தது. ஆனால், இன்று சட்டத்தின் மூலம் எவருக்கும்



நீதி கிடைக்கக்கூடிய வாய்ப்பு வந்துவிட்டது.

✡ ***ஒரு காலத்தில் பிரார்த்திக்கும் ஆற்றலாகக் கருதப்பட்டது பிற்காலத்தில் பொதுப்படையான வல்லுநர்களின் ஆற்றலாக மாறுகிறது.***

அறியாமையில் இருக்கும் ஒரு பக்தன் பிரார்த்தனை செய்து தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறான். காலப்போக்கில் அவனுடைய அறிவு அதிகரிக்கும்பொழுது பிரச்சினை என்று வந்தால், தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி ஒரு செயல்பாட்டின் மூலம் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்கிறான். ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆடிட்டர்கள், தரகர்கள் போன்ற எல்லாத் துறைகளிலும் இருக்கின்ற வல்லுநர்கள்தாம் இன்று பிரார்த்தனையைத் தீர்வு தரும் செயலாக மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் இன்றும் ஒவ்வொருவருக்கும் அவருடைய அனுபவமும், வல்லமையும் உதவாதுஎன்று ஆகி பிரார்த்தனைதான் உதவும்என்ற நிலை வருவதுண்டு. பிரார்த்தனைக்கு மாற்றாக அரசியல் செல்வாக்கும், சமூகச் செல்வாக்கும் இன்று பெருமளவில் செயல்படுகின்றன. இருந்தாலும் இந்தச் செல்வாக்கு பெரும்பாலும் தவறான நோக்கங்களுக்குத்தான் பயன்படுகிறது.

பக்தர்களுக்கு பிரார்த்தனை உதவுவதுபோல இன்று படித்தவர்களுக்கு வல்லுநர்கள் உதவுகின்றார்கள். மருந்து, மாத்திரைகள் வந்துவிட்ட பிறகு இப்பொழுது வியாதியைக் குணப்படுத்துவதற்காக மாந்திரீகர்களிடம் செல்பவர்கள் குறைந்துவிட்டார்கள். பிரார்த்தனை, அறிவை ஆன்மாவின் நிலைக்கு உயர்த்தி, அறிவின் தெளிவை அதிகரிக்கிறது. இப்படி அதனுடைய நிலை உயரும்பொழுது சூழ்நிலையில் இதற்குமுன், அதற்குத் தென்படாத விஷயங்கள் தென்படுகின்றன. அதனால் தீர்வு கிடைக்கிறது. பிரார்த்தனை என்பது ஆன்மாவின் ஆற்றலாகும். தீர்வுஎன்பது ஜடநிலையில் (physical level) பெறக்கூடிய ஒரு செயல்பாடு ஆகும். முன்னதைப் பின்னதாக மாற்றுவதுதான் நாகரீக வளர்ச்சியாகும்.

ஓர் அமெரிக்கப் பொறியியல் வல்லுநருக்கு சர்க்கரை வியாதி வந்து

விட்டிருந்தது. ஆனால், அவர் அதை அறியவில்லை. 120 புள்ளிகளாக இருக்க வேண்டியது ஆயிரம் புள்ளிகளாக உயர்ந்துவிட்டது. இருந்தாலும் அவர் நடமாடிக்கொண்டிருந்தார். ஒரு நாள் அவருக்கு மயக்கம் வந்தது. அவரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். கோமா நிலைக்குச் சென்று விட்டார். டாக்டர்கள் நம்பிக்கை இழந்தார்கள். அவருடைய தாயாருக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவர் மகனை பிரார்த்தனை செய்யச் சொன்னார். ஆனால், மூன்று மாதங்களாக மருத்துவமனைக்கு வந்து மகனைப் பார்க்கவில்லை. பொறியியல் வல்லுநரின் மகள் அவருடன் வந்து மூன்று மாதங்கள் தங்கி, அவருக்குச் சமைத்துக் கொடுத்தாள். நோயாளி, டாக்டர்கள் அவருக்குச் சொல்லியவற்றை எல்லாம் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். நான்கே மாதங்களில் சர்க்கரை வியாதியைப் பற்றி அவரே ஒரு வல்லுநராக மாறினார். அவர் எடுத்த குறிப்புகளெல்லாம் சக நோயாளிகளுக்கு மிகவும் உதவியாக இருந்தன. அவர் செய்த ஆராய்ச்சிகளைப் பற்றி ஒரு புத்தகம் எழுத வேண்டுமென்று அவர் மகள் விரும்பினாள். அவருடைய ஆராய்ச்சி மிகவும் விரிவாகவும், துல்லியமாகவும் இருந்தது. நான்கே மாதங்களில் பூரண குணமாகி, மருந்து, மாத்திரை மற்றும் சிகிச்சையிலிருந்து விடுபட்டார். மருந்து, மாத்திரைக்குப் பதிலாகக் கட்டுப்பாடான உணவு மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றை மேற்கொண்டார். இறுதியாக சர்க்கரை வியாதியைப் பற்றிப் புத்தகத்தையும் எழுதினார். சர்க்கரை வியாதியைப் பற்றி, இருப்பதிலேயே சிறந்த புத்தகம் இதுதான் என்று இப்பொழுது கருதப்படுகிறது. அவர் குணமாவதற்கு பிரார்த்தனை, மருந்து, மாத்திரை, மருத்துவச் சிகிச்சை, சுயக்கட்டுப்பாடுஎன்று எல்லாம் காரணமாக இருந்தன. சிகிச்சை பெற்றுக்கொண்டு இருந்த காலத்தில் எதேச்சையாக நிகழ்ந்த ஓர் ஆறு நிகழ்ச்சிகள் அவர் குணமாவதற்குக் காரணங்களாக இருந்தன. இவையெல்லாமே பிரார்த்தனை அவருக்கு எப்படி உதவியது என்பதை நிரூபிக்கின்றன.

- ✡ **அவருடைய அனுபவத்தை எல்லோரும் பின்பற்றக்கூடிய ஒரு செயல் முறையாக அவர் மாற்றியுள்ளார்.**
- ✡ **அவர் வாழ்க்கையில் எதேச்சையாக நிகழ்ந்ததை மற்றவர்கள் தாமே தேர்வு செய்து பின்பற்ற வேண்டும் என்கிறார்.**



பிரார்த்தனைஎன்பது பெரிய ஆன்மாக்களுக்கு உரியது. வல்லுநர்களின் சேவைஎன்பது சாதாரண குடிமக்களுக்கு உரியது. பிரார்த்தனை தனிப்பட்ட மனிதனுக்கும், சேவை சமூகத்திற்கும் உரியன. வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் இன்று வல்லுநர்கள் வந்துவிட்டதால் ஏதோ ஒரு சில உயர்ந்த மனிதர்களுக்குக் கிடைக்கக்கூடியது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய காலம் வந்துவிட்டது.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரகிருதி மனத்தாலும், உணர்வாலும் செயல்படுகிறது. அதுவே செயல்களை நிர்ணயிக்கின்றது. நல்ல நிகழ்ச்சியானாலும், மற்றவையானாலும், சொந்த வாழ்க்கைப் பிரச்சினை என்றாலும், உலகத்துப் பிரச்சினை என்றாலும், அவை பிரகிருதியின் உள்ளக் கிளர்ச்சியின் பிடியில் உள்ளன.

***உள்ளக் கிளர்ச்சியிலுள்ளது உலகத்துப் பிரச்சினைகள்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மேலெழுந்தவாரியான மனம்:

எண்ணம், உணர்வு, செயலனைத்தும் மேல்மனத்தைச் சார்ந்தவை. நாம் மேலெழுந்தே வாழ்கிறோம்; உடலும் அதற்கு உரியதே.

***மனம், உணர்வு, உடல், மூன்றும் சேர்ந்தது மேல்மனம்.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVI. The Triple Status of Supermind

Page No.145
Para No.7

The action of Supermind can take any poise.
So does its form.
In all poises and forms, it remains the nature of the divine Consciousness.
Its existence is absolute.
Its power too, therefore, is absolute.
Being absolute, its capacity to take poises is endless.
Power is only the extension of the absolute.
Neither is poise, nor its form is limited.
We are human beings.
We are phenomenal.
So, we are a particular form of consciousness.
It is subject to Time and Space.
Therefore, it can only be on the surface.
We know we are only the surface.
Therefore we can only be one thing at a time.
We are only one formation.
We, human beings, are of one poise.
Ours is one aggregate of experience.



## 16. சத்தியஜீவியத்தின் மூன்று கட்டங்கள்

**சத்தியஜீவியச் செயல் எந்த நிலையையும் ஏற்கும்.**
**அதன் ரூபமும் அத்தகையது.**
**எல்லா நிலைகளிலும், ரூபங்களிலும் அது தெய்வீக ஜீவியத்தின் சுபாவமாகும்.**

**அதன் பிரபஞ்ச வாழ்வு பிரம்ம சிறப்புடையதாகும்.**
**அதன் சக்தியும் அது போன்றதே.**
**பிரம்ம சிறப்புடையதால் எந்த நிலையையும் ஏற்கும் அதன் திறன் அனந்தம்.**
**சக்திஎன்பது அதன் சிறப்பின் நீட்சி.**
**அதன் நிலையோ, ரூபமோ அளவுக்குட்பட்டதில்லை.**
**நாம் மனிதர்கள்.**
**நம் நிலை தோற்றம்.**
**எனவே நாம் ஜீவியத்தின் குறிப்பிட்ட ரூபம்.**
**அது காலத்திற்கும், இடத்திற்கும் உட்பட்டது.**
**எனவே அது மேல்மனத்திற்குரியது.**
**நாம் மேல்மனத்திலிருப்பதை நாம் அறிவோம்.**
**நம்மால் ஒரு சமயம் ஒன்றாக மட்டுமே இருக்க முடியும்.**
**நாம் ஓர் உருவகம்.**
**மனிதர்களாகிய நாம் ஒரே நிலைக்குரியவராவோம்.**
**நம் நிலை ஓர் அனுபவக் குவியல்.**

And that one thing for us is the truth.
We acknowledge only that truth.
All the rest is not true.
Or, they are no longer true.
They have disappeared into our past.
They are not yet true.
They are waiting in the future.
They have not yet come into our view.
It is different with the Divine Consciousness.
It is not so particularised.
It is not so limited.
It can be many things at a time.
It can take more than one poise.
Such poises can be enduring.
It is for all time.
In the principle of the Supermind there are three poises.
They are general poises.
They are sessions of its world-founding consciousness.
The first founds the inalienable unity of things.
The second modifies that unity.
It supports the manifestation of the Many in One and One in the Many.
The third further modifies it.
It supports the evolution of a diversified individuality.
It acts by its ignorance.
We are at a lower level.
It becomes there the illusion of the separate ego.

We have seen the nature of the first, primary poise of the Supermind. — Page No.146, Para No.8
It founds the inalienable unity of things.



அந்த ஒன்றே நமக்குரிய சத்தியம்.
நாம் அந்த சத்தியத்தை மட்டுமே அறிவோம்.
மற்றவை எதுவும் உண்மையில்லை.
இனி அவை உண்மையில்லை என்றாவது கூறலாம்.
அவை கடந்த காலத்தில் மறைந்துவிட்டன.
அவை இதுவரை உண்மையாகவில்லை.
அவை எதிர்காலத்தில் காத்திருக்கின்றன.
அவை இதுவரை நம் பார்வைக்குள் வரவில்லை.
தெய்வீக ஜீவியம் இதனின்று வேறுபட்டது.
அது குறிப்பிட்டதன்று.
அது அளவுக்குட்பட்டதன்று.
அது ஒரே சமயத்தில் பலவாக இருக்கும்.
ஒன்றுக்கு மேற்பட்ட நிலைகளில் அது செயல்படும்.
அந்த நிலைகள் நீடிக்கும்.
அது காலத்திற்கும் தொடரும்.
சத்தியஜீவியச் சட்டத்தில் மூன்று நிலைகள் உள்ளன.
அவை பொதுவானவை.
உலகை நிர்மாணிக்கும் கருத்தரங்குகள் அவை.
பொருள்களின் விலக்க முடியாத ஐக்கியம் முதல் நிலையினுடையது.
இரண்டாம் நிலை அதை மாற்றியமைக்கிறது.
ஒன்றில் பல வெளிப்படுவதை அது ஆதரிக்கும். பலவற்றில் ஒன்று இருப்பதும் அதன் ஆதரவுக்குட்பட்டதே.
மூன்றாம் நிலை அதை மேலும் மாற்றும்.
பிரிந்து நிற்கும் தனி மனிதப் பரிணாமத்தை அது ஆதரிக்கும்.
அது அஞ்ஞானத்தில் செயல்படுகிறது.
நாம் தாழ்ந்த நிலையிலிருக்கிறோம்.
பிரிந்து தனித்துள்ள அகந்தையெனும் மாயையாக அது மாறும்.

முதல் நிலையான அடிப்படையான சத்தியஜீவிய நிலையை நாம் கண்டோம்.

அது விலக்க முடியாத ஐக்கியத்தின் அடிப்படை.

It is not the pure unitarian consciousness.
It is a concentration of Sachchidananda in itself.
It is Timeless and Spaceless.
There the Conscious Force does not cast itself into extension.
It contains the universe.
It contains in its eternal potentiality.
It does not do so in temporal actuality.
This is contrary to it.
It is an equal self-extension of Sachchidananda.
It is all-comprehending, all-possessing.
It is all-constituting.
Both this all is one.
It is not many.
There is no individualisation.
Our purified self is purified.
Its reflection can fall on our stilled self.
Then, we love all sense of individuality.
An individual development needs support.
It needs concentration of consciousness.
All is developed in unity as one.
It is held by the Divine Consciousness.
It does so as forms of its existence.
It does not hold them as a separated entity.
It is like the thoughts and images of our minds.
They are not of separate existences.
They are forms taken by our consciousness.
So, all are names and forms to this primary Supermind.
It is pure divine ideation.
It is a formation in the Infinite.
Only that they are the real play of conscious being.
They are not the unreal play of mental thought.



அது தூய்மையான ஐக்கியத்தின் ஜீவியம் - சச்சிதானந்தம் - இல்லை.
அது சச்சிதானந்தச் செறிவு.
அது காலத்தையும், இடத்தையும் கடந்தது.
சித்-சக்தி தன்னை காலம், இடத்துள் மாற்றி அமைப்பதில்லை.
அது பிரபஞ்சத்தை உட்கொண்டது.
காலம் கடந்த வித்தாக அதைத் தன்னுட் கொண்டுள்ளது.
காலத்தில் வெளிப்படும் நிதர்சனமாக அது இல்லை.
இது அதற்கு எதிரானது.
சமநிலையுடைய சச்சிதானந்த நீட்சியாக அது அமைந்துள்ளது.
அது அனைத்தையும் புரிந்துகொண்டு ஆட்சி செய்கிறது.
அனைத்தின் அமைப்பும் அதனுள் அடங்கியது.
ஆனால் இவ்வளவும் ஒன்றே.
இது பல அல்ல.
தனிப்பட்ட உருவகம் இங்கில்லை.
தூய்மையான நம் ஆத்மா தூய்மையானது.
அசைவற்ற நம் ஆத்மா மீது அதன் பிரதிபலிப்பு முழுமையானது.
அது பட்டவுடன் தனித்தன்மை கரைந்துவிடும்.
தனிமனிதனாக வளர ஆதரவு தேவை.
அதற்கு ஜீவியச் செறிவு தேவை.
அனைத்தும் ஐக்கியத்துள் ஒன்றாக வளரும்.
இதை தெய்வீக ஜீவியம் வைத்துள்ளது.
பிரபஞ்ச வாழ்வின் ரூபங்களாக அது இருக்கிறது.
அவற்றைத் தனித்து நிற்பவையாக அது வைக்கவில்லை.
நம் மனத்தில் உதயமாகும் எண்ணம், பிம்பங்களாக அவை உள்ளன.
அவை தனித்தவையல்ல.
நம் ஜீவியம் ஏற்றுக்கொண்ட ரூபங்கள் அவை.
இந்த முதல் நிலை சத்தியஜீவியத்திற்கு அவை நாம, ரூபங்கள்.
அது தெய்வீக எண்ணத்தைச் செயல்படுத்துவதாகும்.
அது அனந்தத்தின் உருவகம்.
தன்னையறியும் ஜீவனின் சத்தியலீலை அவை.
மனத்தின் எண்ணம் இல்லாததைக் கட்டுக்கோப்பாக்குவது இல்லை அவை.

They are not so organised.
The divine soul is in this poise too.
To it there is no difference between Matter and Spirit.
Spirit is Conscious-Soul.
Matter is Force-Soul.
To it they offer no difference.
Because all force is action of consciousness.
All mould would simply be form of Spirit.

There is a second poise. Page No.146
This too is Supermind, the Divine Consciousness. Para No.9
It stands back in the idea from the movement.
It contains the movement.
It realises it.
It is by a sort of apprehending consciousness.
It follows it.
It occupies and inhabits its works.
It seems to distribute itself in its forms.
In each name and form it would realise itself.
It does so as the stable Conscious-Self.

It is the same in all.
It has another realisation too.
It is a concentration of Conscious-Self.
It follows and supports the individual play of movement.
It upholds its differentiation from other play of movement.
It is the same everywhere in soul-essence.
But it varies in soul-form.
This concentration would be the individual Divine.
It supports the soul-form.
It is Jivatman.



அவை அவ்விதம் முறைப்படுத்தப்பட்டவையல்ல.
தெய்வீக ஆத்மாவும் இந்நிலைக்குரியது.
அதற்கு ஜடம் வேறு, ஆன்மா வேறில்லை.
ஆன்மாஎன்பது தன்னையறியும் புருஷன்.
ஜடம் சக்தியில் ஆன்மா.
அதற்கு இந்த மாறுபாடுகளில்லை.
எல்லா சக்தியும் ஜீவியத்தின் செயல் என்பதால் இம்மாறுபாடில்லை.
எல்லா அச்சும் ஆன்மாவின் ரூபங்களே.

இரண்டாம் நிலையுண்டு.
இதுவும் சத்தியஜீவியம், தெய்வீக ஜீவியம்.
சலனத்தில் எண்ணத்தை விட்டுப் பிரிந்து அது பின்னால் நிற்கிறது.
அச்சலனத்தை அது தன்னுட்கொண்டது.
அதை அது சித்திக்கும்.
பிரக்ஞா எனப்படும் நிலை இதுவே.
இது அதைப் பின்தொடரும்.
அது தன் வேலைகளுள் நிறைந்து உறைகிறது.
தன்னைத் தன் ரூபங்களில் அது விநியோகம் செய்கிறது.
ஒவ்வொரு ரூபத்திலும், நாமத்திலும் அது தன்னைச் சித்திக்கின்றது.
நிலையான சத்பிரம்மமாக – தன்னையறியும் பிரம்மமாக – அது செயல்படுகிறது.
எங்கும், எல்லாவற்றிலும் அது ஒன்றே.
அதற்கு அடுத்த ஒரு சித்தியும் உண்டு.
அது சத்பிரம்மச் செறிவு.
சிருஷ்டியில் தனி மனித லீலையை அது பின்பற்றி ஆதரிக்கிறது.
லீலையின் மற்ற அம்சங்களிலிருந்து வேறுபட்டதை அது ஏற்றுக்கொள்கிறது.
ஆத்ம சாரத்தில் அது எங்கும் ஒன்றேயாகும்.
ஆனால் ஆத்ம ரூபம் மாறுகிறது.
இந்தச் செறிவே ஜீவாத்மா.
அது ஆத்ம ரூபத்திற்கு ஆதரவு.
இது ஜீவாத்மா.

It is distinguished from the universal Divine.
It is one all-constituting self.
There would be no essential difference.
But, there will be only a practical differentiation.
It is a differentiation for the play.
It would not abrogate the real unity.
To it all soul-forms are itself.
Still, it establishes a different relation with each separately.
And in each, it does so with all the others.
The individual Divine has its existence.
It is a soul-form and a soul-movement of the One.
There is a comprehending action of consciousness.
It would enjoy its unity with the One.
It would do so with all soul-forms.
It has a forward and frontal action.
It is an apprehending action of support.
Thus it enjoys its individual movement.
It enjoys its relations of a free difference in unity.
It does so with the One.
It also does so with all its forms.
Our purified mind can reflect this secondary poise of Supermind.

Then our soul could support its individual existence.
It can occupy it.
Even there it may realise itself.
It can realise itself as the One.
It is the One that has become all.
It inhabits all.
It contains all.
Even in its particular modification it enjoys its unity with God and its fellows.



இது பிரபஞ்ச ஆத்மாவினின்று வேறுபட்டது.
அனைத்தும் சேர்ந்த அமைப்பு அது.
ஆனால் அடிப்படையான வித்தியாசமில்லை.
நடைமுறை மாறுபாடுண்டு.
லீலைக்குரிய மாறுபாடுண்டு.
அடிப்படை ஐக்கியத்தை அது பாதிக்காது.
அதற்கு எல்லா ஆத்ம ரூபங்களும் அதுவே.
இருந்தாலும், ஒவ்வொன்றுடனும் தனி உறவை ஏற்படுத்திக்கொள்ளும்.
ஒவ்வொன்றுடனும் அது அப்படியே செயல்படும்.
ஜீவாத்மாவுக்கு வாழ்வுண்டு.
புருஷனின் ஆத்மசலனத்தின் ஆத்மரூபம் அது.
ஜீவியம் அனைத்தையும் சேர்த்துப் புரிந்துகொண்டு செயல்படும்.
புருஷனோடு அது ஐக்கியத்தை அனுபவிக்கும்.
அதேபோல் எல்லா ஆத்ம-ரூபங்களுடனும் ஐக்கியத்தை அது அனுபவிக்கும்.
முன்னேறிச் செல்லும் முகப்புடைய செயல் அதற்குண்டு.
அது பிரக்ஞாவின் ஆதரவு.
ஜீவாத்மா சலனத்தை அது அனுபவிக்கும் பாணி இது.
ஐக்கியத்தில் சுதந்திரமான வேறுபாடாக அதன் உறவை அனுபவிக்கும்.
சத்புருஷனுடன் அது அப்படிச் செய்யும்.
அதேபோல் அதன் எல்லா ரூபங்களுடனும் செய்யும்.
சத்தியஜீவியத்தின் இவ்விரண்டாம் நிலையைத் தூய்மையான நம் மனம் பிரதிபலிக்கும்.
நம் ஆத்மா அதன் ஜீவாத்மாவின் வாழ்வை ஆதரிக்கும்.
அதை அது நிரப்பும்.
அங்கும் அது தன்னைச் சித்திக்கும்.
அது சத்புருஷனைச் சித்திக்கும்.
அது பலவான ஒன்று.
அது அனைத்துள்ளும் உள்ளது.
அது அனைத்தையும் தன்னுட் கொண்டது.
குறிப்பிட்ட மாறுதலிலும், கடவுளுடனும், மற்ற ஜீவராசிகளுடனும் அது ஐக்கியத்தை அனுபவிக்கிறது.

There are other circumstances of supramental existence.
There would be no characteristic change in any of these circumstances.
The only change would be this play of the One.
The One has multiplied its multiplicity and of the Many that are still one.
It is all necessary to maintain and conduct the play.

*Contd....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

குருடு:

1) உலகத்தில் நாம் முன்னேறக் கிடைக்கும் வாய்ப்புகளைக் காண முடியாதது.
2) எதைக் குறையென உலகம் அறிகிறதோ, அதைச் சந்தோஷமாக அனுபவித்து, குறையென உணர முடியாத குருட்டுத் தனம்.
3) உலகத்தின் பெருமையை உணருபவனும், தன் சந்தோஷத்தை அறிபவனும் ஆன்ம விழிப்புப் பெறுவது இல்லை.

***1. வாய்ப்பு தெரிவதில்லை.***

***2. குறையை நிறையென அறிதல்.***

***3. உலகத்தின் பெருமையே சந்தோஷம்.***



**இது தவிர மற்ற சந்தர்ப்பங்களும் சத்தியஜீவிய வாழ்வுக்குண்டு.**
**எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தக் குறிப்பிடத்தக்க மாறுதலும் இருக்காது.**

**சத்புருஷனுடைய லீலை மட்டுமே ஒரு மாறுதல்.**
**பலவாகும் திறனை ஒன்று அதிகப்படுத்தியது. பலவானது இனியும் ஒன்றாக உள்ளது.**
**லீலையை ஆரம்பித்து நடத்த இத்தனையும் அவசியம்.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரம்மத்திற்கு லீலை ஆனந்தம் தரவல்லது. தானே ஆரம்பித்தது என்றாலும், அஃது உண்மை. தன்னிடமிருந்தே பிரம்மம் தன்னை மறைத்துக்கொள்ள முடியும் என்பதால், ஆனந்தம் எழுகிறது. நம்மால் அது முடியாது.

***பிரம்மத்திற்கு லீலை ஆனந்தம் தருவதுபோல் நமக்கொன்றில்லை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தனி மனிதன் தன்னையுணர்வதால் முன்னேறுகிறான். அதற்குச் சமூகத்தின் அனுமதி தேவை. சமூகத்தை எதிர்த்து தனி மனிதனால் முன்னேற முடியாது. தான் புதியதாக அறிந்ததை சமூகம் ஏற்க வேண்டும்என முயல்வது தவிர வேறு வழியில்லை.

***தானே அறிந்தாலும் சமூகம் ஏற்றால்தான் முன்னேற்றம்.***

## இம்மாதச் செய்தி

**துரோகம் மடைமையின்**

**விவேகம்.**



## நல்லவர்கள் ஏன் சிரமப்படுகிறார்கள்?

N. அசோகன்

'ஏன் நல்லவர்கள் கஷ்டப்படுகிறார்கள்?' என்ற கேள்வி பலருடைய மனத்தில் எழுகின்றது. பொதுவாக அதற்குப் பதில் தெரிவதில்லை. மற்றவர்கள் அதற்குப் பதில் சொன்னாலும் திருப்தி வருவதில்லை. உயரமான மாணவர்கள், ஏன் பரீட்சையில் தவறுகிறார்கள்என்றோ, அழகானவர்கள் ஏன் சில சமயம் அறிவில்லாமல் இருக்கிறார்கள்என்றோ நாம் கேட்பது இல்லை. பரீட்சையில் தேறுவதற்கும் உயரமாக இருப்பதற்கும், அதைப்போல் அழகிற்கும், அறிவிற்கும் சம்பந்தமில்லைஎன்று நாமறிவோம். இருந்தாலும் நல்லவர்கள் வசதி படைத்தவர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். நல்ல குணமென்பது நம்முடைய ஒழுக்கத்தைக் காட்டுகிறது. வருமானம் மற்றும் செல்வ வளமென்பது வேலை செய்வதில் நமக்குள்ள திறமையிலிருந்து வருகிறது. ஒழுக்கமும், திறமையும் வேறு, வேறு அம்சங்கள் என்பதை நாம் கருதுவதில்லை.

சில நல்லவர்கள் ஏழ்மைக்கும், அநீதிக்கும் ஆளாகிறார்கள்என்பதை மட்டுந்தான் நாம் பார்க்கிறோமேயொழிய, ஏழையாகவுள்ள அந்நல்லவர்களில் பலர் திறமையில்லாமல் இருக்கிறார்கள்என்பதை நாம் கருதுவது இல்லை.

நல்லவர்கள் ஏழ்மையில் வாடுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, நல்லவர்கள்என்று நாம் நினைப்பவர்கள் பார்வைக்கு நல்லவர்களாக இருக்கலாமேயொழிய, உண்மையில் நல்லவர்களாக இல்லாமலிருக்கலாம். இரண்டாவதாக, இவர்களில் பெரும்பாலானோர் செயல்திறன் குன்றியவர்களாவும், சோம்பேறிகளாகவும் இருக்கலாம். மூன்றாவதாக, கடவுள் பக்தியுள்ளவர்கள் இயற்கையாக நல்லவர்களாக இருப்பார்கள்என்று ஓர் எதிர்பார்ப்புள்ளது. இதுவும் உண்மையில்லை.

பக்தர்களுக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி உண்மை பேசுதல். பெரும்பாலான 'பக்தர்கள்' இதில் தேறமாட்டார்கள். அடுத்தவர் விஷயங்களில் தலையிடாதவர்கள் நல்லவர்களாக நம் நாட்டில் கருதப்படு-கிறார்கள். அதுவொரு நன்னடத்தைஎன்றாலும், பூரண நல்ல குணத்திற்கு அது அடையாளமாகாது.

நன்மைக்கு ஆன்மீகரீதியான விளக்கம் என்னவென்றால், அறிவும் உண்மையும் சேரும்பொழுது நன்மை பிறக்கிறது என்பதாகும். அதாவது உண்மைக்கு அறிவு விளக்கம் கிட்டும்பொழுது நன்மை உண்டாகிறது. இப்படிப்பட்ட நன்மையைத் தன்னகத்தே கொண்டவர் சமூகத்தில் இருந்தால், அவர் எங்கிருந்தாலும் நல்ல நிலைமையிலேயே இருப்பார்.

நல்லவர்களைப் பற்றி சமூகத்தில் பல அபிப்பிராயங்கள் உள்ளன. சடங்கு, சம்பிரதாயங்களில் ஊறியவர்கள் சமூகத்தில் நல்லவர்களாகக் கருதப்படுகிறார்கள். சடங்குகளும், சம்பிரதாயங்களும் பழமையின் எடுத்துக்காட்டுகளேயொழிய, பகுத்தறிவின் நிரூபணங்களாகா. பழைமைக்கும், நவீன வாழ்க்கைக்கும் இடையே இன்று ஒரு மோதலும், போராட்டமும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

பழைமையில் ஊறியவர்கள் அதற்குரிய சடங்கு, சம்பிரதாயங்களை விடாமல் அதே சமயத்தில் புதுமைக்குரிய நாகரீக வசதிகள் அனைத்தையும் அனுபவிக்க விரும்புகின்றார்கள். மேலும், நவீன வாழ்க்கைக்கு உண்டான கருத்துகள், மனோபாவம் மற்றும் நம்பிக்கைகளையும் நாடுகிறார்கள்.

பழையதை விடாமல் அதற்கெதிரான புதியதையும் நாடும்பொழுது இரண்டிற்குமிடையேயுள்ள மோதல் வலுக்கிறது. முரண்பாடு உள்ள இடங்களில் துன்பம், செயல்திறன் குறைவது, ஏழ்மை மற்றும் சமூக ஏற்றத் தாழ்வு என்றெல்லாமே சேர்ந்துகொள்ளும். சுமுகநிலை உள்ள இடங்களில் தான் வளர்ச்சி, வருமானம் மற்றும் மகிழ்ச்சி எல்லாம் காணப்படும்.

நல்லவனாக இருப்பதைவிட தன்னை நல்லவனாக மற்றவர்கள் கருத வேண்டும்என்பது மனிதனுக்கு முக்கியம். பார்வைக்கு நல்லவர்என்று



பெயரெடுத்தவர்களிடம் உண்மையில் நல்ல குணங்கள் இல்லையென்றால், நெடுநாள் அவர்களால் தங்களுக்குக் கிடைத்த நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. என்றேனும் ஒரு நாள் சுயரூபம் வெளிவந்தே தீரும்.

இப்படி உள்ளூரில் நல்லவர்என்று பெயர் வாங்கிய ஒருவர் உண்மையில் கபடகுணம் கொண்டவராக இருந்தார். தம்முடைய வீட்டை, குடி இருந்தவருக்கு விற்று, பல ஆண்டுகளாகியபின்பு, வாங்கியவர் ரசீது பெற்றுக்கொள்ளவில்லைஎன்பதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வீட்டை விற்கவே இல்லைஎன்று நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு, குடியிருந்தவரைக் காலி செய்ய முயன்றார். ஆனால், நீதி மன்றத்தில் அவர் வாதம் எடுபடவில்லை; நியாயந்தான் வென்றது. அந்த நல்ல மனிதருடைய போலி முகத்திரை கிழிந்து, அவர் உண்மையில் எப்படிப்பட்டவர் என்பதை நீதிமன்றம் ஊருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

ஆகவே, சமூகத்தின் பார்வையில் நல்லவர்களாகத் தெரிபவர்களும் உண்மையிலேயே ஆன்மீக நற்குணங்கள் பொருந்தியவர்களும் மிகவும் வித்தியாசப்பட்டவர்கள். தோற்றத்திற்கும், உண்மைக்கும் ஏற்றவாறு பலன்களும் வித்தியாசமாகவே இருக்கும்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தானே தேர்ந்தெடுத்த கட்டுப்பாட்டிலும் மனிதன் தன்னை இதமாகவே நடத்துவான். தன்னைக் கடுமைப்படுத்துவது குறைவு. இது குருட்டுத்தனமான அறியாமை. உண்மையை அறியாததால் எழுவது.

***கட்டுப்பாட்டுக்குத் தேவையான கடுமை இயல்பாக எழாது.***

## P.80 One pointed to the immaculate Delight.
பவித்திரமான ஆனந்தத்தை சிக்கெனப் பற்று.

✡ இறையார்வம் இனிமையாக உடலைத் தினிய இருந்தது.
✡ தழலெனவெழும் தணியாத ஆர்வம்.
✡ அரிதாகப் பெறும் அபூர்வமான விடுதலை.
✡ எட்டாதவர் எண்ணிறந்தவர்.
✡ புற உலகின் புனிதப் பிணைப்பில் தன்னையிழந்தவர்.
✡ இரகஸ்யமான நெற்றிக்கண் இனிமையாகத் தேர்ந்தெடுத்தது.
✡ ஒளிமயமான கரம் ஓட்டுவிக்கும் பாணி.
✡ அளவிட்டறியாத அனந்தமான ஆத்மப் பரப்பின் அகன்ற வீச்சு.
✡ எடுக்க எடுக்க வளரும் எண்ணிறந்த புனித சத்தியப் பாதை.
✡ அளவில் அகப்படாத அனந்தனின் மனம்.
✡ குறுகிய குரலை விட்டகன்றான்.
✡ மனிதன் வாழும் காலமெனும் சந்தைக் கைவிட்டான்.
✡ பெரிய அரண்மனையின் அமைதியில் அழுந்தி,
✡ கண்ணும் மனமும் கண்டறியாத தாழ்வாரங்களில் நடை பயின்றான்.
✡ உடலெனும் உருவமற்ற குருவின் குரலைப் பின்பற்றினான்.
✡ வரையறையற்ற சூன்யத்தின் ஒருமைக் குரலான ஒப்பாரி,
✡ பிரபஞ்சம் முணுமுணுக்கும் ஆழ்ந்த குரலின் அமைதி தழுவும்.
✡ சிருஷ்டியில் உலகம் ஜனிக்கும்முன் எழுந்த சலனமற்ற மௌனம்.
✡ ஆத்மநிர்வாணம் காலம் கடந்த கடவுள்.
✡ சிருஷ்டிக்கப்பட்ட உலகின் சீரான நிர்ப்பந்தத்தைக் கடந்து,
✡ எண்ணமும், அதன் நிழலென எழும் உருவமும் மறைந்தன.



✡ ரூபத்தின் அச்சும், மனிதனின் சட்டமும் மாய்ந்தன.
✡ சொற்கடந்த சொர்க்கத்தின் பரப்பு அவனைச் சொந்தமாகக் கொண்டாடியது.
✡ இறைவனைத் தேடும் ஜடமான பூமியில் முழுமுதற் கருவி.
✡ உருவம் பெறாத அடையாளச் சின்னங்களின் அவையில்,
✡ பார்வையால் கட்டுப்பட்டு, ஜனிக்காத முகத்தால் பிணிக்கப்பட்டு,
✡ அவன் ஒற்றையடியின் எதிரொலிக் குரல்.
✡ தனிமையின் அரசவைக் கொலு.
✡ அசைவற்ற காலத்தை அளவிறந்து நிரப்பும் பேரறியாத பேறு.
✡ காலத்தைக் கடந்த இதயத்துடன் இணையும் அவன் ஆத்மா.
✡ அனந்த மௌனத்தைத் தாங்கும் அவனி.

✡ அழியும் எண்ணம் அழியாத ஆத்மாவிடம் புகலிடம் பெற்றது.
✡ ஆத்ம-திருஷ்டி அபரிமிதமாக எழுந்தது.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பகுத்தறிவிலிருந்து பரம்பொருளுக்கும், அதிலிருந்து ஆன்மீக மனம் பரம்பொருளை அறியும் நிலைக்கும் நம்மை பகவான் அழைத்துச் செல்கிறார்.

*பகுத்தறிவு கண்ட பரம்பொருள்.*

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**909) அநியாயம், பாரபட்சம், கோணல், தீமை, தவறு, குறை, தோல்வி ஆகியவை வாழ்வின் பகுதிகள். சாதாரணத் திறமையைவிட அதிகத் திறமையுள்ளவன் இவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அவை அவனைப் பாதிப்பதில்லை. சராசரிக்குக் கீழுள்ளவன் வேலை செய்ய ஆரம்பித்தால், இவை அவனைப் பாதிக்கின்றன. (Not self) புறம் அகத்தைவிடப் பெரியதுஎன அவன் காண்கிறான்.**

*புறம் அகத்தைவிடச் சிறியவனுக்குப் பெரியது.*

மனிதன் தன் கடமைகளை நிறைவேற்ற சாதாரண காரியங்களைச் செய்யவேண்டும். பட்டம் பெறுவது, வேலைக்குப் போவது, திருமணம் செய்துகொள்வது, வீடு கட்டுவது, கார் வாங்குவது ஆகியவை அனைவரும் செய்வது. இது பலருக்கு எளிதாக முடிகிறது; சிலருக்குச் சிரமமாகிறது; ஒரு சிலருக்கு முடியாமற் போகிறது.

- ✡ **அகம், புறம் என்பவை இரு பகுதிகள்.**
- ✡ **அகம் பெரியதானால், அவன் பெரிய மனிதன்.**
- ✡ **அகம், புறமும் சமமானால், அவன் சாதாரண மனிதன்.**
- ✡ **அகம் சிறியதானால், அவன் சிறிய மனிதன்.**

பொறாமை பொல்லாதது. பிறர் வாழ மனம் பொறுக்காது. பிறர் அழிய செயல்படும். கண் திருஷ்டிஎன்பது பொறாமை. கண்ணில் விஷயம் பட்டால் கருகிவிடும். ஓரூரில் எந்த வீட்டில், எந்த முக்கியமான காரியம் செய்ய வேண்டுமானாலும் வெகு சீக்கிரம் எழுந்து வெளியே போய் காரியத்தை முடித்துக்கொண்டு விடிவதற்குள் வீடு வந்துவிடுவார்கள். எவருக்கும்



அவர்கள் வெளியே ஓர் காரியமாகப் போனது தெரியாது.

- ➻ சர்க்கரை ஆலை அதிபர், மைத்துனர் பாங்கில் 40 லட்சம் கடன் கேட்டிருக்கிறார்எனக் கேள்விப்பட்டுத் தன் செல்வாக்கால் கடனை ரத்து செய்கிறார்.
- ➻ எளிய வேலையில் உள்ளவன் திறமையைப் பாராட்டி பாங்கு பெரும் பணம் தர அவனை நாடி சாங்ஷன் செய்தால், நண்பர்கள் பாங்கை நாடி அவன் ஆபத்தானவன், வேலையிலிருந்து டிஸ்மிஸ் ஆனவன், சொத்து அவனுடையது இல்லைஎனப் பயம் காட்டி லோனை ரத்து செய்தனர்.
- ➻ தோட்டம் செழிப்பாக இருப்பதை உற்றவருக்கும், உடையவருக்கும் அழைத்துப் போய்க் காட்டினால், முக்கால் பாகம் அடுத்த மாதம் பட்டுப் போகிறது.
- ➻ செய்தி இப்படிப்பட்டவர் காதில் பட்டால், கண்ணில் பட்டால் போதும், காரியம் கெட்டுவிடும்.

உலகில் அனைவரும் சாதிக்கின்றனர். எப்படிச் சாதிக்கின்றனர்? இவற்றை எல்லாம் மீறிச் சாதிக்கின்றனர்என்பது உண்மை. மேலும் சில உண்மைகள் உண்டு.

- ✡ **திறமை அதிகமானால் திருஷ்டி பலிக்காது.**
- ✡ **மனத்தில் பெருமையில்லாவிட்டால், பொறாமை பொய்த்துவிடும்.**
- ✡ **நல்லெண்ணம் ஏராளமாக இருந்தால், பிறர் கெட்டெண்ணம் பலிக்காது.**
- ✡ **தைரியமிருந்தால், உலகம் பயம் காட்டுவதற்கெல்லாம் உள்ளே எதுவும் அசையாது. உள்ளே எதுவும் அசையாவிட்டால், வெளியே எதுவும் ஆடாது.**
- ✡ **திறமை, நிதானம், நல்லெண்ணம், தைரியம் போன்றவை அகமாகும். வேலை, பணம், காரியம் போன்றவை புறமாகும்.**
- ✡ **அகம் பெரியதானால், புறம் பாதிக்கப்படாது.**
- ✡ **அப்பொழுதும் ஆரம்பிக்கும்வரை வெளியில் தெரியாமலிருப்பது நல்லது.**
- ✡ **அகம் அன்னைக்குரியதானால், புறத்தில் பொறாமை செயல்படுவது தானே விலகிப்போகும்.**

❀❀❀

## 910) பரிணாமத்தை மேற்கொண்டவன் தீமையால் மனம் விட்டுப் போவதில்லை. வாழத் தகுதியற்றவனுக்குத் தீமையின் கொடுமை தாங்குவதில்லை.

*தீமையின் கொடுமை திறமையற்றவனுக்கு.*

*திறமை தீமை தரும் அனுபவம்.*

*தீமை திறமை.*

இரு சிறுவர்களில் ஒருவன் பள்ளிக்குப் போகிறான். அடுத்தவன் போகவில்லைஎனில் அவன் சுதந்திரமாக விளையாடுவான். அடுத்தவன் அழுதுகொண்டே பள்ளிக்குப் போவான். இது அவனுக்குக் கொடுமை. பல ஆண்டுகள் கழித்துப் பள்ளிக்குப் போனவன் ஆபீசராக இருப்பான். சுதந்திரமாக விளையாடியவன் ஒன்றுமில்லாமல் நிற்பான்.

- ✡ **தீமையென மனிதன் அறிவது பள்ளிக்கூடம் போகும் கொடுமை போன்றது.**
- ✡ **வாழ்வின் உயர்மட்டங்களை எட்டும் இலட்சியம் உடையவனுக்குப் பள்ளிக்குப் போவது கொடுமையில்லை, பயிற்சி.**
- ✡ **பள்ளி, சமூகத்தில் உயர்வைக் 'கொடுமை' மூலம் தரும் 'தீமை'.**
- ✡ **தீமை வாழ்வில் மோட்சம் தரும் கடுமை.**

  **வாழ்வில் மோட்சம்என்பது வெண்கலம்போன்ற உடல்நலம், அபரிமிதமான சுபிட்சம், அமிர்தமான ஆனந்தம் தரும் மனித உயர்வு, அனைத்திலும் ஆண்டவனின் புன்னகையைச் சந்திக்கும் அற்புத திருஷ்டி.**

கிரிக்கெட் விளையாடும் பையனுக்கு வெய்யில் தெரியாது. அக்னி நட்சத்திர வெய்யிலும் அவனுக்குப் பொருட்டில்லை. விளையாட அனுமதிக்-காவிட்டால் அவன் நெஞ்சு கொதிக்கும். விளையாடும்பொழுது விளையாட்டுத் தெரியுமே தவிர, வெய்யில் தெரியாது.

- ➛ எந்தச் செயலிலும் சிரமத்தைக் கடந்து சாதிக்க வேண்டிய அவசியம் உண்டு.
- ➛ சாதிப்பவனுக்குச் சாதனை தெரியும்; சிரமம் தெரியாது.
- ➛ சாதிக்க முடியாதவனுக்குச் சிரமம் மட்டும் தெரியும்.



- ➛ பிரபலமான அரசியல் தலைவரை இரவு நெடுநேரம்வரை மக்கள் வந்து சந்திக்கிறார்கள். காலையில் அவர் எழுவதற்குமுன் கூட்டம் வந்து விடுகிறது.
- ➛ மக்களைச் சந்திக்கவும், அவர் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஆசைப்படு-கிறவர்க்குத் தூக்கமில்லைஎன்ற கஷ்டம் தெரியாது. ஏராளமான பேர் தம்மைத் தேடிவருவது சந்தோஷம் தரும்.

  அவருக்குத் துணையாக இருப்பவருக்கு கண் விழிப்பது கஷ்டமாக இருக்கும்.
- ➛ இலண்டனில் பிங்கிலியைச் சந்திக்க வேண்டிவரும்என்ற பேச்செழுந்த பொழுது அந்தச் சந்தர்ப்பம் எழாதுஎன எலிசபெத் விளக்கம் கூறும் வாயிலாக,

  “கிரேஸ் சர்ச்தெரு மட்டமான இடம். பிங்லி உள்ளது க்ரோஸ்வினர் தெரு; உயர்ந்தவர் வாழும் பகுதி. டார்சிக்கு இந்தத் தெரு இருப்பதே தெரியாது. தவறி அந்தத் தெருவுக்கு வந்துவிட்டால் ஒரு மாதம் பிராயச்சித்தம் செய்ய வேண்டிவரும். டார்சியில்லாமல் பிங்லி வெளியே கிளம்பமாட்டார்” என்று கூறுகிறாள்.

கிரேஸ் சர்ச்தெரு மத்தியதர மக்கள் வாழுமிடம். கிழக்கு மூலை என்பது குடிசை வாரியம்; ஏழைகள் வாழுமிடம். லிடியா அங்குப் போய் மறைந்திருந்தாள். அதுவே லிடியாவுக்கும், விக்காமுக்கும் உரிய குகை. அவர்களைத் தேடி டார்சி எலிசபெத்திற்காக அங்குப் பல முறை செல்கிறான். தானே கிரேஸ்சர்ச்க்குப் போகமாட்டான். கிழக்கு மூலையுள் அவனால் கால் எடுத்து வைக்க முடியாது.

- ➛ எலிசபெத்திற்காக அதையும் செய்கிறான்.
- ➛ லிடியாவைத் தேட விக்காமைச் சந்திக்கிறான்.
- ➛ தனக்குச் சகலபாடியாகும்படிக் கெஞ்சிக் கேட்கிறான்.
- ➛ தான் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொள்ள வேண்டும் என்கிறான்.

  அங்கெல்லாம் போவது, அதையெல்லாம் செய்வது அசிங்கம்; ஆபாசம்; நரக வேதனை. எலிசபெத் மீதுள்ள காதல் பூர்த்தியாக அவற்றையும் அவனால் செய்ய முடிகிறது.

அது வேதனையன்று; காதல் சாதனை.

❀❀❀

**911) உலகத்தை அற்புதமாகக் காண பரிணாமத்தைவிட உயர்ந்த நிலையிருக்க வேண்டும்.**

*நிலையைக் கடந்தால் நிகழ்ச்சி மலரும்.*

*அதுவே அற்புதம்.*

✡ **குழந்தைகள் விளையாட்டை ரசிக்க நாம் பெரியவர்களாக இருக்க வேண்டும்.**

✡ **டென்னிஸ், பாட்மின்டன் கற்கும்பொழுது முதலில் பந்து பேட்டில் படாது; அனைவரும் சிரிப்பார்கள். பந்து அப்படிப் பட ஆரம்பித்தால் கோர்ட்க்கு வெளியே போகும்; நெட்டில் விழும். நேராகப் பந்தை அடிக்க நாளாகும். (Coach) டிரெயின் தரும் கோச், அப்படி தடுமாறும் இளைஞர்கள் மெல்ல மெல்லக் கற்றுக்கொள்வதைக் காண்பார். அவருக்கு எப்படிக் கற்பதுஎனத் தெரியுமாதலால், ஆரம்பச் சிரமங்கள் புரியும்.**

**கற்றுக்கொள்பவன் படும் அவதி கற்பிப்பவனுக்கு முன்னேற்றமாகப் புரிவதால், அதன் சிறப்பு அவனுக்கு விளங்கும்.**

✡ **குழந்தையின் மழலையை அடுத்த குழந்தை ரசிக்க முடியாது; தாய் ரசிப்பாள். எந்த நிலைச் செயலும் புரிய, ரசிக்க, அற்புதம்என அறிய நாம் அடுத்த உயர்ந்த நிலையிலிருக்க வேண்டும்.**

✡ **நாம் வாழ்க்கையுள்ளே வாழ்வின் பகுதியாக இருப்பதால் அதன் சிறப்பு புரியவில்லை. வாழ்வைக் கடந்த உயர்ந்த நிலையிலிருந்தால், அது அற்புதம் என விளங்கும்.**

✡ **1950, 1960இல் சுதந்திரத்திற்காகப் போராடிய இளைஞர்கள், தலைவர்கள் நாட்டின் நிலையைக் கண்டு பரிதாப்பட்டனர். மாணவர்கள் பள்ளிக்கு வருவதில்லை; ஸ்டிரைக் செய்கிறார்கள்; இலஞ்சம் தலையெடுத்து விட்டது; எந்த பாக்டரியும் ஓடுவதில்லை; கார் யார் மீது மோதினாலும் கூட்டம் கூடி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்; (Statistics) புள்ளிவிவரம் சேகரித்தால் வீட்டிலிருந்து பாரத்தைப் பூர்த்திசெய்து பொய்யாக எழுதுகிறார்கள்; இப்படியிருந்தால் நாட்டின் எதிர்காலம் என்ன ஆகும்எனக் கவலைப்படாதவரில்லை.**



இந்தியா ஜனநாயகம் மூலம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர முயலுவதால் உலகம் நம்மை அதிகமாகக் கவனித்தது.

⇒ நமக்கிருந்த சிரமங்களெல்லாம் எல்லா நாடுகட்கும் ஆரம்பத்திலிருந்தது என அவர்கட்குத் தெரியும்.

⇒ இந்தியாபோல் புள்ளிவிவரம் நிறைந்த நாடு ஆசியா, ஆப்பிரிக்காவில் இல்லை.

⇒ இராணுவ ஆட்சியில் நாடு முன்னேறும்; மக்களாட்சியில் முன்னேற்ற முயல்வது மிகவும் சிரமம். அதுவும் இந்தியா பெரிய நாடு.

⇒ இன்று இந்தியா சொற்ப காலத்தில் எல்லா ஐரோப்பிய நாடுகளையும் கடந்து முன்னேறும்என்று அனைவரும் கூறுகின்றனர்.

⇒ நாம் உள்ளேயிருந்து பார்ப்பதால் சிரமம், குறை மட்டும் தெரிகிறது.

வெளியிலிருந்து பார்ப்பவர்கட்கு, மற்ற நாட்டு வரலாற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதால், இந்திய முன்னேற்றம் அற்புதமாகத் தெரிகிறது.

**அருமை புரிய அடுத்த கட்டப் பார்வை வேண்டும்.**

*தொடரும்.....*

❀❀❀

**ஜீவிய மணி**

**உள்ளம் அறிந்தால் உவகை பூக்கும்.**

## Invasion by the Infinite.
**அனந்தம் படையெடுக்கும்.**

✡ இருட்டில் விளக்கேற்றினால் வெளிச்சம் வரும்.

அது விளக்கைச் சுற்றியிருக்கும்.

எத்தனை ஆயிரம் விளக்கு ஏற்றினாலும், ஜகஜ்ஜோதியாக இருந்தாலும், இருட்டு இருக்கும்.

சூரியோதயம் முன்னால் இருட்டு கரைந்து, மறைந்து, அழியும்.

✡ நெடுநாள் மழை பெய்தால் ஊரார் ஏழைகட்குச் சோறு போடுவார்கள்.

ஏழைக் குழந்தைகட்குப் பள்ளியில் மதிய உணவு உண்டு.

திருமண வைபவத்தில் அனைவருக்கும் விருந்துண்டு.

தீபாவளியன்று எல்லா வீடுகளிலும் தவறாது விருந்து நடக்கும்.

இதைக் கடந்து சூர்யோதயம்போன்ற அனுபவம் நமக்கில்லை.

அமெரிக்கர் உழைத்து, ஊரைச் செழிப்பாக்கி, வளம் கொழித்த நிலையில் எல்லாத் தொழிலாளிகளும் காரில் பாக்டரிக்கு வரும் நிலை ஏற்பட்ட பொழுது செல்வம், செல்வ வளமாகி, பெருகியதை நாம் கேள்விப்படுகிறோம்; பார்த்ததில்லை. நேரடியாக அமெரிக்கா சென்றவர் பார்த்தனர்.

*வளம் அனந்தமாகப் படையெடுத்த நிலை அது.*

✡ சத்தியஜீவியம் உலகில் வந்து, வாழ்வு மாறினால், அது அனந்தத்தின் படையெடுப்பு என்கிறார். அதன் நிலை,

மனிதனுக்குச் சோர்விருக்காது.



வியாதி வாராது.

வலியிருக்காது.

மரணமில்லை.

வேலை செய்தால் தெம்பு வரும்.

பணம் செலவானால் பெருகும்.

மனிதருடன் உறவாடினால் சந்தோஷம் பொங்கும்.

எல்லாப் புத்தகங்களிலுள்ள ஞானமும் நம் மனதில் எழும்.

உடல் நாளாக, நாளாக இளமையுறும்.

அழிவு அழியும்.

வேலையென்றால் கூடிவரும்.

இதை அனந்தம் நம் வாழ்வில் மலர்வது என்கிறார்.

*இதை அனந்தம் மனித வாழ்வில் படையெடுத்துச் செயல்படுகிறது என்கிறார்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

செய்திகளையும், கருத்துகளையும், கடந்தகாலச் சரித்திர நிகழ்ச்சிகளையும் கல்வி போதிக்கிறது. இன்று குடும்பமும், சமூகமும் கல்வியைச் சேர்த்துக் கொடுக்கலாம். i.e. இன்று சமூகத்தில் திறம்படச் செயல்படும் உணர்வுக்குரிய கல்வியை அளிக்க முடியும்.

*பள்ளி குடும்பமாகவும் செயல்பட முடியும்.*

# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

N. அசோகன்

நாமெல்லாம் அன்னை பக்தர்கள் என்னும்பொழுது நாம் தொடர்ந்து முன்னேறிகொண்டிருக்க வேண்டும்என்று அன்னை விரும்புவார். முன்னேற்றம்என்ற வார்த்தையை அவர் ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பயன்படுத்துகிறார். அன்னையிடம் ஆரம்பத்தில் அன்பர்களாக வருகின்றவர்கள் நாளடைவில் சாதகர்களாக மாற முயல்வார்கள் என்று அவர் எதிர்பார்க்கின்றார். அப்படிச் சாதகர்களாக மாறியபின்பு நாளடைவில் திருவுருமாற்றத்திற்கான தீவிர முயற்சியில் இறங்குமளவிற்கு அவர்கள் தம்முடைய இறையார்வத்தையும் வளர்த்துக்கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறார்.

அன்னையிடம் வந்துள்ள எல்லா அன்பர்களும் அன்னையின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவார்கள்என்று சொல்ல முடியாது. அன்பர்களாக வந்துள்ள பலபேர் அந்த அன்பர்என்ற நிலையிலேயே தங்கிவிடுகின்றார்கள். குடும்ப வாழ்க்கையில் பிடிப்புகள் பலமாக இருப்பதால், அவற்றை மீறி ஆன்மீகத்திற்கு முழுமையாகவர பலரால் முடிவதில்லை. அன்பர்என்ற நிலையிலேயே தங்க முடிவு செய்கின்றவர்களுக்கு முன்னேறுவதற்கோ, சாதிப்பதற்கோ வாய்ப்புகள் இல்லைஎன்று சொல்ல முடியாது. சாதாரணச் சமூக வாழ்க்கையிலும் முன்னேறுவதற்கும், சாதிப்பதற்கும் நிறைய வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்கின்றன. அன்னையின் அருளாற்றலைப் பயன்படுத்தி நம்முடைய வருமானம், உத்யோகம், தொழில், படிப்பு, உடல்நலம், குடும்ப வாழ்க்கை என்றெல்லா இடங்களிலும் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டு வரலாம். அன்னையின் அருளை எப்படிப் பயன்படுத்துவது, அதை நம் வாழ்க்கையில் ஆக்கபூர்வமாகச் செயல்பட வைப்பது எப்படிஎன்பதற்கான வழிமுறைகள் நமக்குத் தெரிந்தால் போதும், அவ்வறிவை வைத்துக்கொண்டு நாம் சாதித்துக் காட்டலாம்.

முன்னேற்றம் மற்றும் சாதனைஎன்ற இரண்டு வார்த்தைகளும்



ஒன்றோடொன்று நெருங்கிய கருத்துகளாக அமைந்திருப்பதால், இவ்விரண்டு வார்த்தைகளையும் இங்கிணைத்துப் பேசுகின்றேன். வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்றவர்கள் சாதனை புரிந்துதான் முன்னேற முடியும். எனக்குத் தெரிந்து சாதிக்காமல் வாழ்க்கையில் முன்னேற வேறு வழிகளிருப்பதாகத் தெரியவில்லை.

முதலில் முன்னேற்றம்என்ற கருத்தின் தன்மை என்ன, அதிலடங்கி உள்ள விஷயங்கள் என்னஎன்று பார்ப்போம். முன்னேற்றம்என்ற சொல்லிற்கு அர்த்தம் என்னவென்றால், தொடர்ந்து மேலே செல்வதாகும். மேலேஎன்பதை கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்குச் செல்வதாக எடுத்துக் கொள்ளலாம். முன்னேற்றம்என்பது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்றா, முன்னேற்றமில்லாமல் – இருக்கின்ற நிலையிலேயே தொடர்ந்து – இருக்க முடியாதாஎன்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன. என்னிடம் இக்கேள்வியைக் கேட்டால் முன்னேற்றம்என்பது தவிர்க்க முடியாததென்று தான் நான் பதில் சொல்வேன். முன்னேற்றமில்லாத வாழ்க்கை பிராணிகளுக்கும், தாவரங்களுக்கும் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், மனிதனுக்கு அறிவும், ஆன்மாவும் உண்டென்னும்பொழுது வளர்ச்சி இல்லாத வாழ்க்கையை வாழ்வதென்பது அவனுக்குச் சரியில்லை.

இப்படி வளர்ச்சிக்கு உதவக்கூடிய அம்சம் நம் உயிருக்கும், அறிவிற்கும், ஆன்மாவிற்கும் எப்படி வந்துள்ளதுஎன்ற அடுத்த கேள்வி நமக்கு எழுகிறது. அதற்குப் பதில் பின்வருமாறு அமைகிறது. இவை மூன்றும் சூட்சும விஷயங்களாக இருப்பதால், மூலப்பொருளான பரப்பிரம்மத்திற்கு உண்டான வரம்பற்ற தன்மை (Infinite extension) இவற்றிற்கும் இயற்கையிலேயே உள்ளது. பரிணாமத்தில் தோன்றும் ஜீவராசிகளின் வடிவங்களுக்கும், தோற்றங்களுக்கும் முடிவே கிடையாது. பரிணாமத்தின் உச்சக்கட்டமாக இன்று மனிதன் காட்சியளிக்கின்றான். ஆனால், மனிதன்தான் பரிணாமத்தின் இறுதி கட்டம்என்று நாம் சொல்வதற்கில்லை. மனிதனுக்குப் பின்னால் சத்தியஜீவிய மனிதன் உருவாகக் காத்திருக்கின்றான். சத்திய ஜீவிய மனிதனுக்குப் பின்னால் ஆனந்தமய ஜீவன் உருவாக வாய்ப்புள்ளது.

அறிவு அஞ்ஞானத்தினுடைய கருவியாகச் செயல்பட்டாலும், அதனுடைய வளர்ச்சிக்குக்கூட வரம்பே இல்லை. நம் வாழ்க்கையின் கடைசி கட்டம் வரையிலும் படித்தால்கூட எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு

விட்டோம் என்று சொல்ல முடியாது. நாம் கற்றதைவிட நாம் கற்க வேண்டியது நிறையவே இருக்கும். நம்மறிவைத் தாண்டி மேலே செல்ல விரும்பினால், முனிவர் நிலை (higher mind), ரிஷி நிலை (illumined mind), யோகியின் நிலை, தெய்வ நிலை (overmind) மற்றும் சத்தியஜீவிய நிலை (Supermind) என்று பல கட்டங்கள் மேலேவுள்ளன. நம்முடைய சைத்தியப் புருஷனுக்கு இயற்கையாகவே முன்னேறுவதில் ஆர்வமுண்டு. சைத்தியப் புருஷனுக்கு வளர்ச்சி என்றால், அது முதலில் அடங்கியிருக்கும் நிலையில் இருந்து வெளிவர வேண்டும். வெளிவந்தபின்னர் நம் பர்சனாலிட்டியின் மற்ற பாகங்களான அறிவு, உணர்வு, உடம்பு ஆகிய மூன்றும் அதனுடைய ஆதிக்கத்திற்குள் வரவேண்டும். இந்நாள் வரையிலும் அது அடங்கி உள்ளதுஎன்றால், நம்முடைய வழக்கமான பர்சனாலிட்டிக்கு அது கட்டுப்பட்டுள்ளதுஎன்றாகிறது. ஆனால், இப்பொழுது நிலைமையை எதிராக மாற்றி, நம் பர்சனாலிட்டியில் சைத்தியப்புருஷன்தான் ஓங்கி இருக்கிறது என்ற நிலை வரவேண்டும். இப்படி முதன்மை நிலைக்கு வந்தபிறகு தன்னுடைய சக்தியை பயன்படுத்தி நம்முடைய அறிவு-உணர்வு-உடம்பு ஆகிய மூன்றையும் பரிசுத்தப்படுத்தி மேலிருந்து வரும் சத்தியஜீவிய சக்தியை ஏற்றுக்கொள்ளும்படித் தயார்செய்ய வேண்டும். இம்மாதிரியான ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு ஒரு முடிவே இல்லை. நாம் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கலாம்.

இப்படி உயிர், அறிவு மற்றும் ஆன்மா ஆகிய மூன்றும் இயற்கை-யாகவே முன்னேறும் தன்மையுடையனஎன்பது நமக்குப் புரியும் பொழுது, நாமும் இப்படி ஓர் இடையறா முன்னேற்றத்தை நாடும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளும்பொழுதுதான் வாழ்க்கையின் அணுகுமுறையும், நம்முடைய அணுகுமுறையும் ஒன்றாகிறது. இப்படி இல்லாமல் வாழ்க்கையின் அணுகுமுறையிலிருந்து நாம் வேறுபட்டு வளர்ச்சியை நாடாமல் இருக்கின்ற நிலையிலேயே இருப்பதாக முடிவு செய்தால் என்னவாகும் என்றொரு கேள்வி எழுகிறது. இப்படி வளராமலும், அதே சமயத்தில் கீழேயும் போகாமலும், இருக்கின்ற நிலையிலேயே தொடர்ந்து இருக்கும்படியான அமைப்பு வாழ்க்கையில் இல்லைஎன்று அன்னை தெளிவாகக் கூறுகின்றார். ஒன்று, முன்னேறிக்கொண்டிருக்கலாம்; அல்லது, முன்னேற்றத்தை நிறுத்தினால் கீழே போகவேண்டி வரும்.



இடைப்பட்ட நிலையென்று ஒன்றில்லைஎன்பது அவருடைய தெளிவான கருத்து. அன்னை தம்முடைய புத்தாண்டுச் செய்திகள் ஒன்றில் இக்கருத்தைச் சுருக்கமாக, அதே சமயத்தில் தெளிவாகவும் வெளியிட்டு உள்ளார். “மானிடர்களே! தேசங்களே! கண்டங்களே! உண்மை அல்லது பாதாளம்” என்று குறிப்பிட்டுள்ளார். உண்மைஎன்ற இடத்தில் நாம் முன்னேற்றம்என்ற சொல்லைப் பயன்படுத்தினாலும் அர்த்தம் மாறாமல் பொருத்தமாகவே இருக்கும்.

நாம் வளர்வதை நிறுத்தும்பொழுது நம்மைச் சுற்றியுள்ள மற்றவை எல்லாம் வளர்வதை நிறுத்தினால், அப்பட்சத்தில் நாமொரு static வாழ்க்கையை வாழ்ந்து காட்டலாம். ஆனால், நாம் வளர்வதை நிறுத்தும் பொழுது நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை வளர்வதை நிறுத்துவதில்லை. நாம் நிறுத்தினாலும் சுற்றுப்புற வாழ்க்கை தொடர்ந்து வளரத்தான் செய்கிறது. இதனால்தான் நாம் வளர்ச்சியை நிறுத்தும்பொழுது பின்னிற்கு தள்ளப்படுகிறோம். ஒரு பறவைக் கூட்டம் தொடர்ந்து மேலும், மேலும் உயரத்தில் பறக்க முயல்வதை நாம் கற்பனையாக வருவித்துக்கொள்ள வேண்டும். அந்தப் பறவைக் கூட்டத்தில் சில பறவைகள் களைப்படைந்து, ஓய்வெடுத்துகொள்ள நினைப்பதாக வைத்துக்கொள்வோம். நடுவானத்தில் சிறகடிப்பதை நிறுத்தினால், இருக்கின்ற உயரத்தில் தொடர்ந்து இருக்க முடியாது. பறப்பதை நிறுத்தினால், மீண்டும் தரைக்குத்தான் இறங்க வேண்டும். மிகவும் சிரமப்பட்டு 500 மீட்டர் உயரத்தை எட்டியிருந்தாலும், பறப்பதை நிறுத்திய உடன் ஐந்தே நிமிடத்தில் பறவை தரைக்கு வந்துவிடும். வாழ்க்கையில் முன்னேறுவதும் இப்படிப் பறப்பதைப் போன்றதுதான். நம்முடைய முன்னேற்றம் தொடர்ந்து நீடித்துக்கொண்டேவிருக்க வேண்டும். முன்னேறுவதை நிறுத்தினோம்என்றால், உடனடியாகக் கீழிறங்க ஆரம்பித்துவிடுவோம். பறப்பதை நிறுத்தும் பறவை தரைக்கு வருவதைப்போல நாமும் அடி மட்டத்திற்குச் செல்லவேண்டி வரும்.

முன்னேற்றம்என்பது தவிர்க்க முடியாதவொன்றுஎன்பதை நாம் இப்பொழுது ஏற்றுக்கொள்ளும்பொழுது, இம்முன்னேற்றத்தை விரைவு படுத்தக்கூடிய அம்சங்கள் என்னென்னஎன்பதை இனி நாம் ஆராய வேண்டும். அதற்குமுன் சாதனைஎன்றால் என்னவென்று, சிறிது விளக்க விரும்புகின்றேன்.

சாதாரண சமூக வாழ்க்கையில் பணம் சம்பாதிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் சாதனையென்றால் பணம் சம்பாதிப்பதுதான்என்று பெரும்பாலானோர் எடுத்துக்கொள்கின்றார்கள். ஆனால், இதுவொரு குறுகிய கண்ணோட்டமாகும். வாழ்க்கையின் மற்ற சூழ்நிலைகளில் இப்படியொரு கண்ணோட்டத்தை வைத்துப் பார்த்தால், அது பொருத்தமாக வாராது. வியாபாரத்தில் லாபம் சம்பாதிப்பதைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு தாம் சாதிக்க நினைத்த லாபத்தை எட்டுகின்றவர்களுக்குமட்டும் இது பொருந்தும்.

ஆனால், வாழ்க்கையில் பல பேருக்குப் பல விதமான லட்சியங்கள் உள்ளன. இவையெல்லாமே பணம் சம்பந்தப்பட்டதென்று நாம் சொல்ல முடியாது. கல்லூரியில் படிக்கின்ற மாணவனுக்குச் சாதனைஎன்பது அந்தப் படிப்பிற்கு உண்டான பட்டத்தைப் பெறுவதாகும். தேர்தலில் நிற்கின்ற வேட்பாளருக்கு அத்தேர்தலில் வெற்றிபெற்று எம்.பி.யாகவோ, எம்.எல்.ஏ. ஆகவோ வருவதுதான் சாதனையாகும். ஓர் எழுத்தாளருக்குத் தாம் எழுதுகின்ற நாவல் அல்லது இலக்கியப் படைப்பை எழுதி முடித்துப் புத்தகமாக வெளியிடுவதுதான் சாதனையாகும். கல்யாணமாகாத இளவயது பெண்ணிற்குச் சாதனைஎன்பது தான் எதிர்பார்க்கின்ற நிலையில் மணமகன் கிடைத்துத் திருமணம் செய்துகொள்வதாகும்.

சாதனையென்பதை மாஜிக் மற்றும் வித்தை காட்சிகள்போல நிகழ்த்த முடியாது. அதற்குப் பின்னொரு முறையிருக்கின்றது. அதை நம்மால் புரிந்து கொள்ளவும் முடியும்; பின்பற்றவும் முடியும். எனர்ஜியை ஆர்கனைஷேஷன் மற்றும் சிஸ்டங்களுக்கு ஆட்படுத்தி, அதையொரு சாதிக்கும் திறனாக (productive power) மாற்றும்பொழுது, இறுதியில் பலனாக நமக்குச் சாதனை கிடைக்கிறது. இப்படி எனர்ஜி சாதிக்கும் திறனாக மாறும்பொழுது, நம்முடைய ஸ்கில் அந்த எனர்ஜியை பலனாக மாற்றித் தருகிறது.

பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவிகளை வைத்து நாமிந்தச் செயல் முறைகளை விளக்கலாம். பள்ளியில் சேர்வதன் முன்னர் குழந்தைகளின் எனர்ஜி ஒழுங்குபடுத்தப்படாமல் உள்ளது. அதன் காரணமாக அது பெரும்பாலும் விளையாட்டில் விரயமாகிவிடுகிறது. படிப்பதன் பொருட்டுப் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்கும்பொழுது படிக்க வேண்டுமென்ற அந்த நோக்கம் ஒழுங்குபடாமலிருந்த அவர்களுடைய



எனர்ஜிக்கு ஒரு டைரக்ஷன் கொடுத்து, அந்த எனர்ஜியை ஒரு forceஆக மாற்றுகிறது. பள்ளிக்கூடத்தை நாமொரு ஆர்கனைஷேஷனாகப் பார்க்கும் பொழுது அதற்கென்று சில ஸிஸ்டங்கள் மற்றும் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த ஸிஸ்டங்களையும், விதிமுறைகளையும் மாணவ, மாணவியர்கள் ஏற்கின்றார்கள். ஆசிரியர்கள் பாடம் புகட்டுவது, படிப்பதற்காகக் கொடுக்கப்படும் பாடப் புத்தகங்கள், பள்ளியின் working hours, பரீட்சை மற்றும் மதிப்பெண்கள் என்றெல்லாவற்றையும் அவர்கள் ஏற்கிறார்கள். இவை எல்லாம் மாணவர்களின் ஒழுங்குபடுத்தப்படாத எனர்ஜியை ஓர் ஆக்கப்பூர்வமான productive forceஆக மாற்றுகிறது. பிள்ளைகளின் கற்கும் திறனும் (learning ability), ஆசிரியர்களின் போதிக்கும் திறனும் இந்த ஆக்கப்பூர்வமான எனர்ஜியைப் பயன்படுத்தி, அதை அறிவாக (knowledge) மாற்றித் தருகின்றன. பள்ளியாகவோ, மருத்துவமனையாகவோ, தொழிற்சாலையாகவே, அரசாங்க அலுவலக-மாகவோ, எதுவாக இருந்தாலும் அடிப்படையாகச் சாதிக்கும் முறை மேற்கண்டவாறுதான் அமைகிறது. மருத்துவமனை வியாதி நிவாரணத்தைப் பலனாகத் தருகிறது. தொழிற்சாலைகள் பொருட்களை உற்பத்தி செய்து தருகின்றன. அரசாங்க அலுவலகம் அலுவலக வேலைகளைச் செய்கிறது. ஸ்தாபனம் எதுவாக இருந்தாலும், முக்கிய அம்சங்களான எனர்ஜி, டைரக்ஷன், சக்தி, ஸிஸ்டங்கள், திறமை மற்றும் பலன் என்று எல்லாம் தவறாமல் இருக்கும்.

*தொடரும்.....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நெடுநாளாக நீ அறிந்ததை பேப்பரில் எழுதினால் உடனே அவ்வறிவைப் பெற்று, காரியத்தை நிகழ்த்தும் திறன் பெறுகிறது.

***எழுத்திற்கு உயிருண்டு.***

**ஐரோப்பா தன்னை முறைப்படுத்தியுள்ளது (organised). அது பூர்த்தியானவுடன் ஒரு குழந்தையும் அதை அழிக்க முடியும்.**

✡ பகுதியின் திறமை வளர்ந்து நெடுநாள் பலன் தந்தாலும், அது பகுதியே. முழுமை தேவைப்படும் நேரம் வரும்பொழுது பகுதியும், அதன் திறனும் காற்றில் கரைந்துவிடும்என்பது தத்துவம்.

✡ மானேஜர், மானேஜராக உள்ளவரை ஸ்தாபனம் வளரும்.

✡ மானேஜர் சந்தர்ப்ப விசேஷத்தால் முதலாளியாகத் தன்னை மாற்ற முயன்றால், சில சமயங்களில் ஓரளவும், பல சமயங்களில் பேரளவும் வெற்றி பெறலாம்.

✡ அவை அஸ்திவாரமில்லாத வெற்றி.

✡ ஐரோப்பாவில் விஞ்ஞானம் வளர்ந்தது. அது மனவளர்ச்சி. மனம் பகுதி. அதை முழுமையாக்கும் ஆத்மா அதற்கு அஸ்திவாரமாக இல்லை. அதன் சிறப்பு mechanical perfection மெஷினின் திறமையாக அமைந்தது. அது ஜெர்மனியில் உச்சக்கட்டம் எட்டியது. எந்த இரயிலும் ஜெர்மனியில் ஒரு நிமிஷம் தாமதமாக வந்ததில்லை. செயலின் சிறப்பு எட்டிய உச்சக்கட்டம் அது. அதன் முடிவென்ன?

ஜெர்மனி தன்னையே அழிக்க உலகை அழிக்க முயன்றது.

நாடும், நாட்டின் திறமையும், ஜீவனும், சுதந்திரமும் க்ஷணத்தில் அழிந்தன.

தன்னையழித்த அமெரிக்கரை இன்று ஜெர்மனி பின்பற்றுகிறது.

✡ மாமியார் தம் சிறு அதிகாரத்தை முழு அதிகாரமாக மாற்றி வெற்றி



பெற்றால், வெற்றி பூரணமானதும் வீட்டை விட்டு விரட்டப்படுவாள்.

✡ பகுதியின் வெற்றி வளரும். அது உச்சக்கட்டப் பூரணம் பெறும்வரை முழுமை காத்திருக்கும். நேரம் வந்தால் முழுமை பகுதியைக் கண்ணில் காணாதவாறு கரைத்துவிடும்.

✡ 564 மகாராஜாக்கள் அதுபோல் இந்தியாவில் 200 வருஷம் கொட்டம் அடித்தனர். பெரிய அந்தப்புரம் பெற்றவர் பலர். இலண்டனிலேயே இருந்து கொண்டு நாட்டை மறந்தவர் பலர். ஆகஸ்ட் 15, 1947 அன்று சமஸ்தானங்கள் கடலில் கரைத்த காயமாக மறைந்தன. ஐரோப்பாவைப் பற்றி பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுவதும் அதுவே.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எதற்காக நாம் காத்திருக்கின்றோம் என்றறிவது தன்னை அறிவதாகும். உன்னைப் பொருத்தவரை அதுவே சத்தியம், பிரம்மம்.

ஆழ்ந்த மனம், தன்னை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கும் பொழுது, மேலெழுந்தவாரியாக மனம் அர்த்தமற்ற காரியங்களில் ஈடுபடுகிறது.

அர்த்தமற்ற அந்தச் சலனங்களும் ஆழ்ந்த மனத்தைப் பூர்த்தி செய்யவே முனைகின்றன.

மேல்நிலையில் ஆழ்ந்த மனம் பூர்த்தியானால், மனிதன் உயர்ந்தவனாகிறான்.

***தன்னையறிவதே உன்னைப் பொருத்தவரை சத்தியம்.***

# அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

ஸ்ரீ அரவிந்தர் அன்னையை என் வாழ்வில் ஏற்றுக்கொண்டபின் எனக்கேற்பட்ட பலன்களும், அனுபவங்களும் ஏராளம், ஏராளம். அவற்றில் முக்கியமானவைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் 2001ஆம் ஆண்டு அரவிந்த் கண் மருத்துவமனையில் அறிவியல் எழுத்தாளராக வேலையில் அமர்ந்தேன். அரவிந்த் மையத்தில் எங்கு பார்த்தாலும் ஸ்ரீ அரவிந்தர், அன்னை படம் இருக்கும். அப்பொழுது எனக்கோ அவர்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால், இயற்கையிலே எனக்குக் கடவுள் பக்தி அதிகம்.

2003ஆம் ஆண்டு என் பெற்றோர்கள் எனக்குத் திருமணம் செய்து வைத்தனர். எல்லோரையும் போலவே என் திருமண வாழ்க்கையை ஆரம்பக் காலக்கட்டத்தில் மகிழ்ச்சியோடும், கனவுகளோடும் ஆரம்பித்தேன். ஒரு சராசரி மாமியார்போலவே என் அத்தை நடந்துகொள்வார். என் கணவரோ குணத்தில் நல்லவர். இருப்பினும் தாய் சொல்லைத் தட்டாதவர். எப்பொழுதும் பிரச்சினையாய் இருந்தது வாழ்க்கை. என் வாழ்க்கையே இருண்டு விட்டதாக நினைத்து அழுதுகொண்டே இருந்தேன். நான் அப்பொழுது வணங்கிய தெய்வத்திடம் முறையிட்டு அழுவேன். தற்காலிக முடிவே கிடைத்தது.

கல்யாணமாகிய இரண்டாவது மாதம் குழந்தை உண்டாயிற்று. குழந்தையைச் சுமந்த நான், ஒரு நாளும் சிரித்து மகிழ்ந்திருக்கவில்லை.



எப்பொழுதும் வேதனைதான் மிஞ்சும். ஒவ்வொரு பிரச்சினையையும் உங்களுக்கு விவரித்தால் பக்கம் போதாது. மற்றும் அவை மிகச் சாதாரண விஷயங்கள்தாம்என உங்களுக்கே தோன்றும். இருப்பினும் என் அத்தை அவைகளை பூகம்பமாய் கிளப்புவார். வேதனையை கருவிலிருக்கும் என் குழந்தையிடம் மனம் விட்டுப் பேசி ஆற்றிக்கொள்வேன். எனக்காகப் பரிந்து பேச வந்த என் பெற்றோர்களும் அவமானப்பட்டுச் சென்றார்கள். இப்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்த நான், தற்செயலாக என் அலுவலகத்தில் புதிதாகச் சேர்ந்த என் சகதோழியிடம் என் குடும்பப் பிரச்சினையைச் சொல்லி அழுதேவிட்டேன்.

அப்பொழுது அவள் சற்று தயங்கி, எனக்கு அன்னையைப் பற்றிச் சொன்னாள். அவள் சொல்ல, சொல்ல எனக்குள் ஒரு சந்தோஷம், ஓர் ஆர்வம் எழுந்தது. நானாக நிறைய விஷயங்கள் அன்னையைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அந்த ஆர்வம் இன்றளவும் எனக்கு இம்மிகூடக் குறையவில்லை. ஆர்வத்தால் உடனே இணையதளத்தில் ஸ்ரீ அரவிந்தர், அன்னையைப் பற்றித் தேடினேன். அன்னையின் வரலாற்றைப் படித்துத் தெரிந்துகொண்டேன். ஆர்வம் மிகுதியால் அன்னை பற்றிய பல புத்தகங்களை வாங்கிப் படித்தேன்.

மெதுவாக அன்னையை நாட ஆரம்பித்தவுடனே எனக்கு வீட்டில் பிரச்சினை குறையத் தொடங்கியது. எப்படியெனில், என் கணவர் அத்தை கிளப்பும் எந்த பிரச்சினையையும் என்னிடம் கொண்டு வரவில்லை. அதனால் எங்களுக்குள் ஒருவித சந்தோஷம், அமைதி நிலவியது. அன்னையைத் தெரிந்துகொண்ட க்ஷணத்திலிருந்து எனக்கிருந்த குழப்பம் நாளாக, நாளாக விலகியது.

இப்பொழுது நான் அன்னையை மட்டுமே நம்புகிறேன்; முழுமனதுடன் பிரார்த்திக்கிறேன். அன்னையின் திருவுருவப் படத்தை வீட்டில் வைத்து இருக்கிறேன். அன்னையைப் பற்றி நினைக்கும்போதே மனதில் ஓர் அமைதி, சந்தோஷம். அன்னையிடம், தனி வீடு பார்த்து சீக்கிரத்தில் எங்களைக் குடி வையுங்கள்என வேண்டிக்கொண்டேன். தனி வீட்டுக்குப் போக வேண்டும்என்பதை கனவில்கூடக் காணாதேஎனக் கூறிய என் கணவர்,

தானே வீடு பார்த்து அத்தை, மாமா ஆதரவுடன் என்னைத் தனி வீட்டில் குடித்தனம் வைத்தார். இப்போது ஒரு விசேஷம்என்றால் நாங்கள் அங்குச் சென்று கொண்டாடுவோம். அடிக்கடி போன் பண்ணி விசாரிப்பதன் மூலம் எங்களுக்குள்ளும் பாசம் கூடி வருகிறது. இதற்கு எல்லாம் அன்னையே காரணம். தனி வீட்டுக்குப் போகும் ஒரு மாதத்திற்கு முன், அன்னை என் சம்பளம் கூடும்வண்ணம், எனக்கு வேலையை அமைத்துக் கொடுத்தார்கள். அதுவும் அரவிந்த் ஆராய்ச்சி மையத்திலேயே Ph.D. பண்ணக்கூடிய சூழலோடு research fellowவாக வேலையில் சேர்ந்தேன். எல்லாம் அன்னையின் அருள்தான் காரணம். ஏனென்றால் தற்செயலாக வேலை நிமித்தம் ஆராய்ச்சி மையத்தின் தலைவரைச் சந்தித்தேன். அப்போது ஒரு நேர்முகத்தேர்வு நடைபெற இருப்பதை அறிந்த நான், அதற்கு நான் தகுதியாக இருப்பதைத் தெரிந்துகொண்டு, ஆராய்ச்சி மையத் தலைவரிடம் கூறினேன். அவர் மிக அருமையாகப் பேசினார். என்னை ஊக்குவிக்கும் வண்ணமாக இருந்த அவருடைய பேச்சு, Ph.D. பண்ணக்கூடிய வாய்ப்பைப் பற்றியும் தெளிவாக்கியது. எவ்வளவோ பிரச்சினைகளைச் சந்தித்து, அன்னையின் உதவியால் பழைய பணியில் இருந்து இதற்கு இடம் பெயர்ந்தேன். இன்று பலவாறு அன்னையின் அருளைக் காண்கிறேன். என் பணியில் எனக்குக் கிடைத்த project, அன்னை எனக்காகத் தேர்ந்தெடுத்த project எனலாம். ஏனெனில், என் சகதோழிகள் அனைவருக்கும் வெகுகடினமான பணி, அதிக நேரம் labஇல் இருந்து வேலை செய்ய வேண்டிய கட்டாயம். ஆனால், அன்னை எனக்குத் தேர்ந்தெடுத்துக் கொடுத்த project என் போன்ற குடும்பஸ்தருக்குத் தகுந்த project. என் வேலை நேரத்திலேயே project பணிகளை நன்றாக, எளிதாக முடிக்கக்கூடிய, என் குடும்பச் சூழலுக்கு ஒத்துப்போகும் project.

எடுத்த ஒவ்வொரு வேலையிலும், காரியங்களிலும் நான் அன்னையைப் பார்க்கிறேன். அவர்களுடைய உதவியின்றி என் வாழ்வில் எதுவும் நடக்க-வில்லை.

என் கணவரும் மிக அன்பாகப் பழகுகிறார். அவர் அன்னையிடத்தில் முழுமையாக வரவில்லையெனினும், அன்னையைப் பற்றிச் சொன்னால்,



முன்பைவிட அமைதியாகக் கேட்டுக்கொள்கிறார். கண்டிப்பாக அவரும் அன்னையிடம் வருவார்என முழுமையாக நம்புகிறேன். என் குழந்தையை அன்னையிடம் முழுமையாகச் சமர்ப்பணம் பண்ணிவிட்டேன். அவன் வளர்ச்சியிலும், அறிவிலும் அன்னை இருக்கிறார். அவனும் நன்றாக அன்னையிடம் பேசுவான்; பிரார்த்திப்பான். என் தாய், தந்தை, தங்கைகள், தம்பி அனைவரும் என் வாழ்வில் நடந்த அற்புதங்களைக் கண்டு அன்னையை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

அன்னை என் வாழ்வில் வந்தவுடன் வாழ்க்கைப் பாதையே சீராக அமைந்துள்ளது. எதிலும் ஒருவித அமைதி, சந்தோஷம் தெரிகிறது.

“மரிக்க நினைத்த என்னையும் வாழ வைத்த அன்னைக்கு என் கோடான கோடி நன்றிகள்”.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்தின் தலையாய செயல், சிந்தனையில்லை; புரிந்து கொள்வது. சிந்தனையின்றிப் புரிந்தால் மனம் உடலை நிர்ணயிக்கும்.

***சிந்திக்காதே; புரிந்துகொள்.***

## அற்புத குழந்தை

இல. சுந்தரி

நம்மால் முடியாத வேலையைப் பூர்த்தி செய்து தரும்படி இறைவனை வேண்டிக்கொள்கிறோம். நம்மால் முடிந்த வேலையைச் செய்யும்போது இறைவனை அழைப்பதில்லை. சமர்ப்பணம் செய்பவர்கள் அதையும் இறைவனுக்குச் சமர்ப்பணம் செய்வார்கள். இருந்தாலும் செயலில் நம்பிக்கை நம் திறமையிலிருக்கும். இந்த நிலை மனிதனுக்கு மட்டுமில்லை, தெய்வங்களுக்கும் உண்டு என்பதை ஓர் உபநிஷதக் கதை கூறுகிறது.

காபி சாப்பிட, கடிதம் எழுத, ஸ்விட்ச் போட இறைவனை அழைத்தால், "இது என்ன சிறுபிள்ளைத்தனம்?" என நினைக்கிறோம். வெளியில் சொல்ல வெட்கப்படுகிறோம். காப்பி சாப்பிடுவதும் இறைவனருள் மட்டுமே என்பது (அவ்வாறு உணரும் நம்பிக்கை), பெரிய நம்பிக்கை. என்னால் இறைவன் அருளின்றி அணுவளவும் அசைய முடியாது என்றுணர்ந்தவர் நாயன்மார் நிலையை எட்டியவர். அது பெரிய பக்தி. என்னைவிட இறைவனுக்கு அதிகம் தெரியும் என்பது ஆன்மீகத் தன்னடக்கம்.

\- கர்மயோகி

நீ கையாளும் முறை யாதாயினும், அதில் விசேடத் திறமையும், சக்தியும் அடைய நேரிடினும், முடிவு இறைவனது அருளையே பொருத்துள்ளது என்பதை நீ உணர வேண்டும்.

\- அன்னை



எந்த நாட்டில் சுபிட்சம் அதிகமாக இருக்கிறதோ, அங்குக் கோயிலுக்குப் போகிறவர்கள் குறைவு. தெய்வ பக்திஎன்பது உண்மை-யானாலும், சௌக்கியமாக வாழ தெய்வம் உதவும்என்பது ஓரெண்ணம். வாழ்க்கையில் வசதியும், நிம்மதியும் உள்ளவர்கள் ஆண்டவனை அதிகமாகக் கருதுவதில்லை. என்றும் பிரச்சினையுள்ள வாழ்விலிருப்பவர்கள் இடைவிடாது இறைவனை அழைப்பார்கள். இது தவிர, இறைவனுக்காக இறைவனை பக்தி செய்பவர் அரிது. எனினும் இல்லாமலில்லை.

அத்தகு இரண்டு கதாநாயகிகளே இங்கு இக்கதையில் இடம் பெறுகின்றனர். அதாவது, கடமையைச் செய்தாலே போதும், அதுவே கடவுள் வழிபாடுஎன்பவள் ஒருத்தி. கடமையைச் செய்தாலும், நலமுடனிருந்தாலும் கடவுளின்றி எதுவுமில்லை என்றொருத்தி.

"வசந்தீ! மணி 9.30. தேர்விற்கு இன்னும் அரை மணி நேரமே இருக்கிறது. இனி ஆட்டோ பிடித்து, பரீட்சை ஹாலுக்குப் போக வேண்டும். இப்போது நாம் 'பப்ளிக் எக்ஸாம்' எழுதப் போகிறோம். இன்று முதல் நாள் வேறு. டென்ஷனில்லாமல் போய் இடத்தைக் கண்டுபிடித்து உட்கார வேண்டாமா?" என்று படபடத்தாள் சாந்தினி.

சிறிதும் சலனமின்றி சிரித்த முகத்துடன் அன்னை அறையிலிருந்து வெளியே வந்த வசந்தி, "ஒன்றும் கவலைப்படாதே. அன்னையிடம் சொல்லி விட்டு வரவேண்டாமா" என்றவாறு தேர்வு எழுதத் தேவையானவை உள்ள பையைத் தோளில் மாட்டியவாறு அம்மா, அப்பாவை நமஸ்கரித்து விடைபெற்றுக் கிளம்பினாள் வசந்தி.

"இன்னும் ஏதேனும் பாக்கியிருக்கிறதா?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள்.

அதற்கும் சிரிப்பு மாறா முகத்துடன் பதிலளிக்கிறாள் வசந்தி. "எதற்குமே முடிவு என்பதில்லை. நாம் முடிக்கும் இடம்தான் முடிவு" என்றாள்.

"அம்மா! தாயே! போதும் உன் வியாக்கியானம். பரீட்சை எழுதிய பிறகு வைத்துக்கொள்வோம்" என்றாள் சாந்தினி சீரியஸ்ஸாக.

வசந்தியின் பெற்றோர் அவர்கள் உரையாடல்களை ரசித்துத் தமக்குள் சிரித்துக்கொண்டனர்.

வாசலில் ஆட்டோக்காரக் கண்ணன் தயாராய் வண்டியுடன் நின்று இருந்தார்.

வசந்தி அர்த்தபுஷ்டியுடன் சாந்தினியைப் பார்க்க, "ஓ, உன் அன்னை வண்டியனுப்பியிருக்கிறாரா?" என்றாள் கிண்டலாக.

'ஆமாம்' என்பதுபோல் பார்த்தாள் வசந்தி.

"பாவம் அன்னை. இப்படி எதற்கெடுத்தாலும் பிரார்த்தனை, சமர்ப்பணம் என்று ஓயாது அவருக்குத் தொல்லை தருகிறாய். மிகவும் திணறிப்போகப் போகிறார் அன்னை".

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"பிறகென்ன? உன் கடமையை நீ ஒழுங்காகச் செய்துவிட்டால் இப்படிப் பயந்து, பயந்து சாமி கும்பிடத் தேவையில்லையல்லவா?"

"நீ தவறாகவே புரிந்துகொள்கிறாய். கடமைகளைச் சரியாகச் செய்யாமல் பிரார்த்திப்பது வேண்டுமானால் பலன் கருதிய பிரார்த்தனை ஆகலாம்; பயபக்தியாய் இருக்கலாம். ஆனால், கடமையை ஒழுங்காய்ச் செய்தாலும் எதுவும் நம் கையிலில்லை. கடவுளுக்கு நாம் எப்போதுமே கடமைப்பட்டவர்கள். கடவுள் நம் நன்றிக்குரியவர். எல்லாவற்றையும் தெரிவிப்பது, அவரை மறவாதிருப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக என்னுள் பதிந்திருக்கிறது. என்னால் இதை மாற்றிக்கொள்ள முடியாது" என்றாள் வசந்தி.

*(இங்கு நன்றி என அன்னை குறிப்பிட்டுள்ள ஒரு கருத்தினை நினைவுகூறுவது பொருந்தும்.*

*நன்றி: இறைவனிடமிருந்து வரும் அருளைப் பெற்றதற்கான அறிகுறி. இறைவன் உனக்காகச் செய்தவற்றையெல்லாம், செய்து கொண்டிருப்பவற்றையெல்லாம், பெற்றுக்கொண்டதை எளிமையுடன் அங்கீகரிக்கும் பாவனை. இறைவனுக்காக உள்ளார்ந்து கடன்பட்ட உணர்ச்சி எழுவது. இறைவன் உனக்காகச் செய்தவற்றிற்கெல்லாம் பொருத்தமானவனாக ஆவதற்குச் செய்யும் முயற்சி).*



"உனக்கு எல்லாம் நல்லதாக நடக்கிறது. அதற்குக் கடவுள்தான் காரணம் என்பாய். நான் கடவுளை மறுக்கவுமில்லை. உன்போல் ஒரேயடியாய், அதே வேலையாக என் கடமைகளை மறக்கவுமில்லை. எனக்கு மட்டும் எதுவும் நல்லதே நடக்கவில்லையா?" என்கிறாள் சாந்தினி.

"கடவுளை நினைக்கவில்லை என்றால் நடக்காது; நினைத்தால் நடக்கும் என்று நான் சொல்லவில்லை. மனிதர்கள்தாம் அப்படி இருப்பார்கள். தன்னைப் புகழ்ந்தால் ஒன்று; இகழ்ந்தால் ஒன்று என்பது மனித குணம். கடவுளுக்கு எதுவும் பொருட்டில்லை. தன்னைக் காட்டிக்கொள்ளும் தேவையோ, அவசியமோகூட இல்லை. நாமாகக் கற்பித்துக்கொள்வதுதான் எல்லாம்".

"பிறகு ஏன் கடவுள், கடவுள் என்று உருகுகிறாய்?"

"தெரியவில்லை சாந்தி. எனக்கு உள்ளூரப் பிடிக்கிறது, அவ்வளவு தான்".

"சரி, சரி. இப்போது இந்த சப்ஜெக்ட் எடுத்தால் எனக்குப் பாடம் மறந்துபோகும்" என்று கூறி, ஏதோ புராதனப் பொருளைப் பார்ப்பதுபோல் அவளை ஏறிட்டு நமட்டுச்சிரிப்பு சிரித்தாள் சாந்தி.

'இவற்றிற்கெல்லாம் நான் மசியமாட்டேன்' என்பதுபோல் இயல்பாயிருந்தாள் வசந்தி.

சாந்தினியும், வசந்தியும் ஒரே தெருவில் வசிப்பவர்கள். ஒரே பள்ளியில் பயில்பவர்கள். படிப்பிலும் இருவரும் ஆர்வமுள்ள மாணவியர். சாந்தினியின் தந்தை பணிமாற்றல் பெற்று 3 ஆண்டுகளுக்கு முன்புதான் அவர்கள் இவ்வூருக்கு வந்தார்கள். இவர்கள் நட்பு மூன்று வயதைப் பெற்றிருந்தாலும் முன்னூறு ஆண்டு பழகியவர்களைப்போல் அவர்களுக்கு அன்பிருந்தது. நேர்மை, உழைப்பு, திறமை இருவருக்கும் இருந்தன. அதே நேரம் இருவருக்கும் எதிரெதிரான குணங்களும் உண்டு. சாந்தினி குறும்புத் தனமான பெண். வசந்தி மிகவும் சாதுவான பெண். சாந்தினி சில நேரங்களில் படபடப்பாய்ப் பேசுவாள். வசந்தியோ எல்லா நேரங்களிலும் அமைதியாய்ப் பேசுவாள். எல்லாவற்றையும் கடந்து ஒருவரை ஒருவர்

நேசித்தனர். இந்த அன்பு காரணமாய் அவர்களுக்குள் சண்டை என்பதே எழாது.

வசந்திக்குக் காலை முதல் இரவு வரை ஒவ்வொன்றிற்கும் கடவுளிடம் சொல்வது, கடவுளை வணங்குவது போன்ற பழக்கமுண்டு. தன் திறமை மீதோ, உழைப்பின் மீதோ அவளுக்கு நம்பிக்கையில்லை. 'எல்லாமே இறைவனால் மட்டுமே' என்ற எண்ணம் ஆழமாக இருந்தது. சாந்தி இதற்கு மாறாக, 'கடவுள் தனக்குக் கொடுத்துள்ள திறமை, உழைப்பு இவற்றை நேர்மையாய்ப் பயன்படுத்த வேண்டும். அதுவே தான் இறைவனுக்குச் செய்யும் வழிபாடு' என்று நம்புகிறவள். அது தவிர, கடவுளை எண்ணி, பக்திஎன்ற பெயரால் நீண்ட நேரத்தை உழைக்காமல் செலவிடுவது சரியில்லைஎன்ற கோட்பாடுடையவள்.

❥❥❥

தேர்வு முடித்து, ஒருவரை ஒருவர் மிகுந்த மகிழ்வுடன் பார்த்துச் சிரித்தவண்ணம் வெளியே வந்தனர். தேர்வைச் சிறப்பாக எழுதியதன் அடையாளம் இது.

"வசந்தி, இனிமேல் ரிசல்ட் வந்து, கல்லூரியில் சேரும்வரை ஏறக்குறைய இரண்டு மாதங்கள் விடுமுறைதான். எனவே, அடுத்த கோர்ஸ் சேர்வதற்கான பயிற்சியில் சேர வேண்டியதுதான். நீ என்ன சொல்கிறாய்?"

"நான் அன்னையிடம் சொல்லிவிட்டால், அடுத்தது தன்னால் நிகழும்" என்றாள் வசந்தி.

"நீ உனக்குப் பிடித்த கோர்ஸில் சேர்வதற்குக்கூட அன்னையிடம் சொல்ல வேண்டுமா? அதற்குத் தேவையான தகுதியைத்தான் அன்னை உனக்கு முன்பே கொடுத்திருக்கிறாரே. நாம் வேறு அவரை அழைத்துச் சொல்ல வேண்டுமா? அவர் நம்மைக் கவனித்துக்கொண்டுதானே இருக்கிறார்?"

''அவரே பார்த்துக்கொள்ளட்டும்என்பது அகங்காரமில்லையா? உரியவர்க்குத் தெரிவிப்பது அடக்கமில்லையா? என்னைக் கேட்டால் கடவுளைவிட எதுவும் முக்கியமில்லை என்பேன்".

"அப்படியென்றால், கண்ணை மூடிக்கொண்டு காட்டில் போய் தவம் செய். நாங்கள் இதையெல்லாம் பார்த்துக்கொள்வோம்".



"கண்ணை மூடிக் காட்டில் தவம் செய்ததெல்லாம் பழைய கதை. இன்று நம் வாழ்விற்குள் வந்து அதிர்ஷ்டம் தர அன்னை வந்துவிட்டார். கண்ணை மூடிக் காட்டில் தவம் செய்வதைவிட, உன் போன்றவர் நடுவில் இருந்துகொண்டு கடவுளை நினைப்பது சிறப்பல்லவா?"

"என்போன்றவர் என்று என்னை ஏன் குறை சொல்கிறாய்?"

"குறை சொல்லவில்லை. அடிக்கடி இப்படிப் பேசி என் இலட்சியத்தை நான் மறவாதிருக்கவும், மேன்மேலும் சிறப்பாகச் செய்யவும் உன்போல் என்னைத் தூண்டிவிட காட்டில் யாரிருக்கப் போகிறார்கள்?"

"ஆக, என் தூண்டுதலால்தான் உன் இலட்சியம் தொடர்கிறது என்று சொல்".

"ஆம், அதற்குரிய கருவியாக உன்னைத்தான் அன்னை அனுப்பி இருக்கிறார்கள்".

"சரி, சரி. ஆளை விடு. நாளைக்குக் கம்ப்யூட்டர் சென்டருக்குப் போய், சேர்வதற்குப் பணம் கட்டவேண்டும். அன்னையிடம் இப்பொழுதே சொல்லிவிடு" என்று கூறிச் சென்றுவிட்டாள் சாந்தினி.

மறுநாள், விடுமுறையின் முதல்நாள்என்று அதை அன்னைக்கு அர்ப்பணிக்க மனதில் முடிவு செய்திருந்ததால் வேறு எங்கும் செல்லாமல், அன்னை பற்றிய நூல் படிப்பதிலும், அன்னை அறை சுத்தம் அதிகப்படுத்துவதிலும், தன் புத்தக அலமாரி, மேஜை இவற்றைச் சீர் செய்வதிலும் ஈடுபட்டாள் வசந்தி. அவள் பெற்றோர் அன்னை அன்பர்கள் என்பதால் யாரும், யாரிடமும் எதுவும் கேட்பதில்லை. அன்னை கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக்கொள்ளும் முயற்சியில் மூவருமே ஆர்வம் கொண்டிருப்பதால் பிணக்கின்றி சுமுகமாக யாவும் நடக்கும்.

சாந்தினி அன்னை முறைஎன்று எதையும் ஏற்காதபோதிலும், இயல்பாகவே அன்னைக்கு உகந்த இயல்பு (உண்மை பேசுவது, சுத்தம், ஒழுங்கு, கட்டுப்பாடு) யாவும் இருந்ததால் இக்குடும்பத்தில் அவளிடம் ஈடுபாடிருந்தது. சாந்தியும், வசந்தியும் எது பேசினாலும் பெரியவர்கள்

ரசிப்பார்களே தவிர தலையிடமாட்டார்கள்.

காலை 10 மணிக்கு சாந்தினி வந்தாள்.

“வசந்தீ” என்று அழைத்தாள். “வா, சாந்தி” என்று பொறுமையாக வரவேற்றாள் வசந்தி. “உன் வரவேற்பு இருக்கட்டும். நேற்றே, காலையில் கம்ப்யூட்டர் சென்டர் போகவேண்டும்என்று சொன்னேனல்லவா? இன்னுமா நீ புறப்படவில்லை” என்றாள் சாந்தினி.

“இல்லை சாந்தி. இன்று முதல் நாளல்லவா? இதை அன்னைக்குச் சமர்ப்பிக்கத் தோன்றியது. நாளைக்குப் போகலாமே”.

“உன்னைத் திருத்தவே முடியாது வசந்தி. நான் கடவுள் வேண்டாம் என்று சொல்லவில்லை. கடமையைச் செய்வோம் என்றுதானே சொல்கிறேன்”.

“கடமையைவிட கடவுள் பெரியவர் அல்லவா?”

“சரி, சரி. நீ எப்படியாவது போ. நான் கம்ப்யூட்டர் சென்டர் போய் நேரம் தெரிந்து வருகிறேன்; எனக்கு மட்டும்தான். உனக்கு உன் அன்னையே சொல்வார்” என்று கேலி செய்தாள்.

“அன்னை எதைச் செய்தாலும் நான் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வேன்”.

அவள் முதுகில் தோழமையுடன் தட்டிவிட்டு புறப்பட்டாள் சாந்தினி.

கம்ப்யூட்டர் சென்டர் பிரின்ஸிபால் இவர்களை நன்கு அறிந்தவர்.

“வாம்மா. எங்கே உன் தோழி?” என்றார்.

“அவளுக்கு ஏதோ முக்கிய வேலையிருப்பதால் வரமுடியவில்லை” என்று தோழியை விட்டுக்கொடுக்காமல் பேசினாள்.

“சரி, சரி. உங்களிருவர்க்கும் ஒரே டைம்மில் ஏற்பாடு செய்துவிட்டேன். நாளை வசந்தியையும் அழைத்து வந்துவிடு. காலை 10 – 11 உங்கள் டைம்” என்றார்.

இருவருக்கும் உரிய முறையில் படிவம் நிரப்பி, பணம் கட்டி, இரசீது பெற்றுக்கொண்டாள்.

நேரே வீட்டிற்குப் போகாமல் வசந்தியிடம் வந்தாள்.

“வா சாந்தி. குளிர்ச்சியாக ஏதேனும் குடிக்கிறாயா? வெயிலில் வந்திருக்கிறாய்” என்று பரிவுடன் கேட்டாள் வசந்தி.



“எனக்கொன்றும் ‘ஐஸ்’ வைக்க வேண்டாம். இந்தா அன்னை இதை உன்னிடம் கொடுக்கச் சொன்னார்” என்று ரசீதை அவளிடம் கொடுத்தாள்.

அதைப் பெற்றுக்கொண்டு ‘தாங்க்யூ மதர்’ என்று அன்னையின் பாதத்தில் வைத்துவிட்டு வந்தாள்.

“ரொம்பச் சந்தோஷப்படாதே. நான் உன் தோழிஎன்பதால் பிரின்ஸிபால் இதை என்னிடம் கொடுத்தனுப்பினார். வேறு யாரேனும் சென்றால் கொடுத்திருப்பாரா? நடப்பனவெல்லாம் அன்னைச் செயல்என்று பொருத்திக் கொள்கிறாய்”.

“எப்படிப் பார்த்தாலும் அதுதான் உண்மை. She knows everything. She will arrange everything”.

“நீ திருந்தவே போவதில்லை போ” என்று அவளைச் செல்லமாய்க் கடிந்துகொண்டு போய்விட்டாள்.

இவைபோன்ற பல்வேறு நிகழ்ச்சிகள். இருவரும் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றாயிற்று. திருமணத்திற்குப் பிறகும் வேலைக்குப் போகலாம் என்ற சலுகையுடன் இரண்டு பெண்களுக்கும் இரண்டு வேறு திசைகளில் திருமண வாழ்வும் தொடங்கிற்று.

வசந்தியின் மெல்லிய இயல்புகளுக்காக அவளை விரும்பும் பிரபுவிற்கு அவளை அவள் பெற்றோர் மனம் விரும்பி திருமணம் செய்வித்தனர். குடும்பம், அலுவலகம் யாவற்றையும் இயல்பான தன் பக்தியோடு இணைத்து நலமாக வாழ்கிறாள்.

சாந்தினியை அவள் பெற்றோர் அவள் திறமைக்கும், படிப்பிற்கும் குறையில்லாமல் நல்ல மாப்பிள்ளையைத் தேர்வுசெய்து மணமுடித்தனர்.

நம்மை ஈர்க்கும் நிகழ்ச்சி சாந்தினியின் வாழ்விலிருப்பதால் இப்போது அவளைச் சிறிது கவனிப்போம்.

சாந்தினி தன்னியல்புக்கு ஏற்ப, வீட்டு வேலையிலும் சரி, அலுவலகப் பொறுப்பிலும் சரி, திறமையாகவும், பொறுப்பாகவும் நடந்துகொண்டாள். அவளுடைய ஒழுங்கு, சுத்தம், திறமை, உழைப்பு இவற்றால் அலுவலகத்தில் நல்ல பெயர் அவளுக்கு. அவள் கணவன் வாசுவுக்கு அவளைப் பற்றிப் பெருமிதம். ஆனால் சாந்தினியின் மாமியார்க்குத்தான் அவள்மீது சிறிது

குறை. அவள் கடவுளையே மதிக்காமல் கர்வமாய் இருப்பதாய்த் தோன்றியது.

“ஏண்டா வாசு! உன் மனைவிக்குக் கொஞ்சம்கூட கடவுள் நம்பிக்கையே இல்லையா? பக்தி இல்லாமல் ஒரு பெண்ணா? அதிசயமாயிருக்கிறது” என்றாள் மாமியார்.

“என்னம்மா? எதனால் நீ அப்படி நினைக்கிறாய்?”

“காலையில் எழுந்தால் சுவாமி படத்திற்கு விளக்கேற்றுவது, கோலம் போட்டுப் பூ வைப்பது என்று எதுவும் செய்வதில்லை”.

‘‘அதெல்லாம் நீ செய்துவிடுவதால் பெரியவர் செய்யட்டும்என்று இருப்பாள்’’.

“இல்லையே. ஒரு நாள் அவளிடம், ‘இன்று நீ கோலம் போட்டு, பூ வைத்துவிடு’ என்றேன். ‘இல்லை அத்தை. என்றும்போல் நீங்களே செய்து விடுங்கள்’ என்று சொல்லிவிட்டாள்”.

“அதனால் பக்தியில்லைஎன்று முடிவு செய்துவிட்டாயா? இதெல்லாம் வெறும் புற அடையாளம்தான். நான் என்ன தினமும் சுவாமி கும்பிடு-கிறேனா? என் கடமையை ஒழுங்காய்ச் செய்கிறேன். அதுவே எனக்கு நிறைவளிக்கிறது. அவளும் அதுபோலிருக்கிறாள்”.

“நீ ஆண்பிள்ளை. உனக்கும் சேர்த்து உன் மனைவி இதைச் செய்ய வேண்டாமா?”

“அம்மா, சுத்தமும், சத்தியமும் பெரிய வழிபாடு. உண்மையில் அதுவே சாரமும்கூட. சம்பிரதாயங்கள், சடங்குகள் காலப்போக்கில் ஜீவனற்றுப் போகும். அதனால் எனக்கு அது பெருங்குறையாகத் தோன்றவில்லை. அவளிடம் பொய்யில்லை, பேராசையில்லை. சரி, அவள் வீட்டில் என்ன வேலை செய்கிறாள்?”

“காலையில் டிபன் தயாரிக்கிறாள். இரவிலும் அவள்தான் சமையல். மதியம் சமைப்பது நான். மற்ற வேலைகளை வேலைக்காரி செய்துவிடுவாள். வேலைக்காரி வரவில்லையெனில் எனக்குச் சிரமம் தாராமல் அவளே சமாளித்துவிடுவாள். அவளால் மிகவும் முடியாதபோது என்னிடம் பொறுப்பை விடுவாள்’’.

“சரி, நீ, அவள் சமையலறையில் வேலை செய்யும்போது கவனித்து



இருக்கிறாயா?’’

“இல்லை. வேலை செய்யும்போது குறுக்கே போனால் தொல்லையாய் இருக்கும்என்று போகமாட்டேன்’’.

“நாளைக்கு ஜாடையாய் மறைந்திருந்து கவனி’’.

பிள்ளை சொல்கிறானே என்று கவனித்தாள்.

சுத்தமாகத் தலைவாரி முடித்திருக்கிறாள். குளித்துச் சுத்தமான உடை அணிந்திருக்கிறாள். சமைக்கப் போகும் உணவிற்கு ஏற்ற பொருட்களை ஒழுங்கு செய்துகொண்டு, தடுமாற்றமோ, பரபரப்போயின்றி மின்னல் வேகத்தில் செய்து முடிக்கிறாள். ஒரு பொருளைக் கீழே சிந்தவில்லை, சிதறவில்லை. காய்களைச் சீவிய தோல், மிளகாய்க் காம்பு எல்லாவற்றையும் கையோடு டஸ்பினில் போட்டு, எத்தனை அழகாய்ச் செய்கிறாள். அவள் உணவு தயாரித்து முடித்த பிறகு சமையலறைச் சுத்தம் பார்த்திருக்கிறாள். ஆனால், அவள் ஒவ்வொன்றையும் வரிசைப்படுத்திச் செய்யும் அழகை இன்றுதான் கவனித்திருக்கிறாள். இத்தனை வருட தன் சமையல் அனுபவத்தில் இன்னமும் தனக்கு இந்தத் தெளிவு வாராததையும், அவள் திறமையையும் ஒப்பிட்டு வெட்கப்பட்டாள். ஆரம்ப நாட்களில் தன் மாமியாரிடம் திட்டு வாங்கியதெல்லாம் நினைத்தாள். பயத்தினால் ஒன்று கிடக்க ஒன்று செய்துவிடுவாள். அப்போது மாமியார் வந்து, ‘இது என்ன எருமை மாடு கன்று போட்ட இடம்போல?’ என்று திட்டுவார். நினைத்தவுடன் தன்னையறியாமல் சிரித்துவிட்டாள்.

அடிக்கடி உள்ளே வந்து எட்டிப் பார்த்துத் திடீரெனச் சிரிக்கும் மாமியாரைக் கவனித்த சாந்தினி, “என்ன அத்தை சிரிக்கிறீர்கள்?” என்று இயல்பாகக் கேட்டாள்.

“என் மாமியார் வீட்டு அனுபவம் நினைத்துச் சிரித்தேன்” என்றாள்.

“என்ன அனுபவம் அது?” என்றாள் சாந்தினி.

“இந்தச் சின்ன வயதில் இத்தனை அழகாய் நீ சமைப்பது, சமையல் அறையைச் சுத்தமாய் வைப்பது, இதெல்லாம் அந்த நாளில் எனக்குத் தெரியாது. சமையலறை ஒரே அமர்க்களமாயிருக்கும். மாமியாரிடம் திட்டு வாங்குவேன். அதையெண்ணிச் சிரித்தேன்” என்றாள்.

“நீங்கள் எனக்குப் பூரணச் சுதந்திரம் கொடுத்திருக்கிறீர்கள். நான் அச்சமில்லாமல் என் வேலைகளைச் செய்வதால் நன்றாகச் செய்ய முடிகிறது” என்கிறாள் சாந்தினி.

“அது மட்டுமில்லை சாந்தி. உனக்கு இயற்கையாகவே ஒழுங்குபடுத்திச் செய்யும் திறமையிருக்கிறது” என்று மனம்விட்டுப் பாராட்டினாள்.

“தாங்ஸ் அத்தை” என்று கூறி, அடுத்த வேலைக்குப் போய்விட்டாள்.

மரியாதை, சுத்தம், நாகரிகம், ஒழுங்கு எல்லாம் உள்ள இவளிடம் கடவுள் என்ற பேச்சேயில்லை. இதுவே போதும் என்று நினைப்பதுபோல் இருந்தது.

அவள் (சாந்தினி) அலுவலகம் சென்றபின், வாசு அவளிடம் (தன் தாயிடம்), “என்னம்மா கவனித்தாயா?” என்று கேட்டான்.

“கவனித்தேன் வாசு. அவள் வேலை செய்யும் அழகே தனி. என் மருமகள் திறமைசாலிஎன்று நினைக்கப் பெருமையாகத்தானிருக்கிறது. ஆனால் இதனாலெல்லாம் கடவுள் பக்திக்கு ஈடாகிவிட முடியுமா?” என்று ஏக்கத்துடன் கூறினாள்.

“பொய், பணத்தாசை இருக்கிறதா என்பதையும் பார்த்துவிடுவோம்” என்றான் வாசு.

அவள் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் தன் கைப்பையை அவர்கள் படுக்கையறையில் வழக்கமாக மாட்டும் இடத்தில் மாட்டி வைத்துவிட்டு மற்றவற்றைக் கவனிக்கப் போய்விட்டாள்.

அவளறியாமல் அவள் கைப்பையைத் திறந்து ஒரு பத்து ரூபாய்க் கட்டை வைத்துவிட்டான்.

மறுநாள் அவள் அலுவலகம் புறப்படுமுன் தன் கைப்பையில் வண்டி சாவி, பேனா, பெட்ரோல் போட மற்றும் இன்றியமையாத தேவை ஏதேனும் ஏற்பட்டால் அதற்குஎன்று சிறிது பணம், டேபிள்சாவி என்று எல்லாவற்றையும் ஒரு முறை சரி பார்க்கும் தன் வழக்கப்படி சரி பார்த்தாள். ஒரு பத்து ரூபாய்க் கட்டு அதிகமாயிருந்தது. ஒருவேளை தன் கணவன் எதன் பொருட்டேனும் வைத்திருக்கக்கூடும்என்று நினைத்து, “என்னங்க, எதற்கு என் பையில் பணம் வைத்திருக்கிறீர்கள். ஏதாவது வாங்கி வர



வேண்டுமா? தவணை ஏதும் கட்டுவதற்கா? ரசீது ஒன்றுமில்லை. பாங்க் கணக்கு என்றால் பாஸ்புக் இல்லை” என்று கேட்டாள். எப்போதேனும் இப்படி அவள் உதவியை அவன் நாடுவதுண்டு. அவள் ஆபீஸ் போகும் வழியில் கடை, பேங்க், எல்லாமிருப்பதால் பல நேரம் அவள்தான் இதை எல்லாம் செய்ய நேரும்.

அவர்கள் அறையிலிருந்து அவள் இதைக் கேட்டதால் ஹாலிலிருந்து உள்ளே வந்த கணவன், “நான் ஏதும் பணம் வைக்கவில்லையே. நான் ஏன் உன் பையைத் திறக்கப்போகிறேன்?” என்றான்.

அவள் சிந்திக்கவில்லை, பதறவில்லை, குழம்பவில்லை.

“வேறு யார் வைக்கக்கூடும்? மாமா நம் அறைக்குள் தேவையில்லாமல் வரவேமாட்டார். அத்தை எதுவானாலும் என்னிடம் சொல்லுவார்” என்றாள்.

“ஆபீஸில் யாராவது உன் சிநேகிதியின் வேலையாயிருக்குமோ?” என்றான்.

“அந்த அளவிற்கு எனக்குச் சிநேகிதிகள் இல்லை. ஏன் என்றால், ஏன் என்பதோடு சரி. வசந்தியைப்போல் எனக்கு சிநேகிதி அமையவில்லை” என்றாள்.

“யாரேனும் இலஞ்சம் கொடுக்க முயன்றிருப்பார்களோ?” என்றான்.

“நோ சான்ஸ். என் டேபிளில் அதற்கெல்லாம் இடமில்லை. மேலதிகாரியே இரண்டடி தள்ளி நின்றுதான் பேசுவார்” என்று உறுதியாய்க் கூறினாள்.

“சரி, சரி. நீங்கள்தான் தவறுதலாய் வைத்திருப்பீர்கள். யோசித்துப் பாருங்கள். இந்தாருங்கள்” என்று பணத்தை அவன் கையில் திணித்து விட்டு, எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

“என்னம்மா? எப்படி என் மனைவி?” என்று பெருமை பொங்கக் கேட்டான் வாசு.

“அவள் எந்தத் தேர்விலும் தோற்பதில்லை. என் மருமகளைப் பற்றி மகிழ்ச்சியாய்த்தானிருக்கிறது. தெய்வ பக்தி இல்லையேஎன்ற ஒரு குறைதான்” என்றாள் அம்மா.

“கவலைப்படாதேயம்மா. வழிபாடு செய்தால்தான் பக்தி என்றில்லை.

அவளுக்குப் பக்தி வேறு ரூபத்திலிருக்கும்" என்று கூறிவிட்டான்.

இப்படியே பிள்ளைப் பேறில்லாமல் 5 ஆண்டுகள் ஓடிவிட்டன. வீட்டினர்க்கு அது ஒரு குறையாயிருந்தது.

ஒரு நாள் அவள் கணவன் தனிமையில் அவளிடம், "சாந்தி! நாமொரு நல்ல மகப்பேறு மருத்துவரைப் பார்க்கலாமா?" என்று தயங்கியவாறு கேட்டான்.

கடமை, கட்டுப்பாடு, ஒழுங்கு, சுத்தம் எல்லாம் நிறைவாக இருந்தாலும், ஒரு சராசரிப் பெண்ணாய் பிள்ளைச் செல்வம் பற்றிய ஏக்கம் உள்ளூர இருக்கத்தான் செய்தது. அவள் சோர்ந்து போகவில்லையே தவிர உள்ளூர ஏக்கமிருந்தது.

அவன் கேள்விக்குப் பதிலாக, "உம். முறையான எதுவும் செய்வதில் எனக்குத் தடையில்லை" என்றாள்.

மருத்துவப் பரிசோதனை நடந்து ரிஸல்ட்டும் வந்தது. சாந்திக்கு மகப்பேற்றினுக்குச் சொற்ப வாய்ப்பேயுள்ளது என்றும், அப்படியே வாய்த்தாலும் அவள் உயிருக்கு உத்திரவாதமில்லை என்றும் எல்லா மருத்துவர்களும் கூறிவிட்டனர்.

"சாந்தி, நான் இதைக் குறையாக எண்ணவில்லை. நீ இது பற்றி வருந்த வேண்டாம். நீ எப்போதும்போல் உற்சாகமாய் உன் வேலைகளைக் கவனி. தேவைப்பட்டால், அனாதை விடுதியிலிருந்து உனக்குப் பிடித்த குழந்தையை எடுத்து வளர்ப்போம்" என்றான் கணவன்.

அவன் பெருந்தன்மை அவளை நெகிழவைத்தது. தொட்டதற்கெல்லாம் மனைவியைக் குறை சொல்லும் கணவன்மார்களை நிறையப் பார்த்து இருக்கிறாள்.

தனக்கு நிகரில்லை எனக் கர்வப்படவில்லை என்றாலும், இதுவரை வாழ்வில் அறிந்திராத சோகம் லேசாய்த் தலையெடுத்தது. வசந்தியுடனான தன் இளமைப்பருவ நாட்களில், ஒவ்வொரு செயலிலும் அவளுக்கும் தனக்குமிடையே இருந்த வித்தியாசங்களை நினைவுகூர்ந்தாள்.

*தொடரும்.....*

❀❀❀



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**71. நல்லபடியாக நடப்பதை ஆழத்திற்குக் கொண்டு போ.**

எல்லோரிடமும் நாம் நல்லபடியாகப் பழகுகிறோம்என்று நமக்குத் தெரியும், அனைவரும் ஏற்கின்றனர். அவ்வகையில் எந்த ஆபீஸுக்குப் போனாலும், எந்த விசேஷங்களுக்குப் போனாலும் நமக்கு வேலை நடக்கிறது, நம்மைச் சுற்றிப் பலர் சூழ்ந்து பிரியமாக விசாரிக்கிறார்கள்எனில், அங்கு நாம் மேலும் செய்யக்கூடியதுண்டு.

இதனுள் உள்ள தத்துவங்கள் சில:

1) இது மேலெழுந்தவாரியான பழக்கம். நிலைமை உயர்ந்தபொழுது நம் பழக்கமும் உயராவிட்டால், இது எதிராக மாறும் வாய்ப்புண்டு.
2) இந்த நல்ல பழக்கத்தை ஆழத்திற்குக் கொண்டுபோனால், அன்னை நம்மை MLAயிலிருந்து மந்திரியாக மாற்றுவதுபோன்ற மாற்றங்களைக் கொண்டுவருவார்.
3) இந்த நல்ல பழக்கம் ஆழத்தில் எதிரான பழக்கமிருப்பதால் ஏற்பட்டதாகும்.

அனைவரும் நம் பழக்கத்தை ஏற்கும்பொழுது, நமக்கு மட்டும் இது நம் பழக்கமன்று. உள்ளே நான் எதிராக இருக்கிறேன்எனத் தெரியும். சமயத்தில் நாம் நம் உண்மையை மறந்து, பிறர் சொல்வதையே ஏற்றுக் கொள்வோம். அதைச் செய்தால், அத்துடன் எல்லாம் முடிந்துவிடும்.

❀ உள்ளே உள்ள 'பழக்கத்தை' நாம் நினைவுபடுத்திக்கொண்டேயிருக்க வேண்டும். பிரமோஷன் வந்தவரைப் பாராட்டும்பொழுது நம்மனம் அதை வெறுத்துக் கரித்துக் கொட்டும். வாழ்க்கை அதைக் காட்டத் தவறாது. அந்த நேரம் ஒருவர் கதவைச் சாத்துவார். பாராட்டுப் பெறுபவர் விரல் நசுங்கும். இது நம் 'எண்ணத்தைப்' பிரதிபலிக்கும். வராண்டா வழியே பேசிக்கொண்டு போகின்றவர்கள் "இத்தனையும்

வேஷம், நம்பாதே" என அவர்கட்குள் பேசிக்கொள்வார்கள். அது நம்மனநிலையைக் காட்டும்.

- ❀ ஒவ்வொரு தரம் பிறர் நம்மைப் பாராட்டும்பொழுது உள்ளேயுள்ளதை நினைவுபடுத்திச் சமர்ப்பணம் செய்யவேண்டும். சமர்ப்பணம் உதட்டளவிலிருந்தால் வருஷம் 20 ஆனாலும் எதுவும் நகராது. உண்மையான சமர்ப்பணம் உடலையே உலுக்கும். தொடர்ந்து செய்தால் சில நாட்களில் உள்ளே சந்தோஷம் வரும். அதே நேரம் அன்னை செயல்படுவார்.
- ❀ அப்படி அன்னை செயல்படும்பொழுது கம்பனி சேல்ஸ்மேன் MLAஆகி, அடுத்த பீரியடில் மந்திரியானதுபோலிருக்கும்.
- ❀ டிகிரியும் எடுக்காதவருக்குப் பல்கலைக்கழக சிண்டிகேட் மெம்பர் கிடைக்கும்.
- ❀ ஆழம் அற்புதம்.

அற்புதம் செயல்பட அன்னை கண்ணில் நம் ஆழம்பட வேண்டும்.

ஆழத்தின் உண்மை தவறாது, அன்னை தவறமாட்டார்.

அற்புதம் வரக்காத்திருப்பது தவறாது. அதற்குத் தவறத் தெரியாது.

**நம் உண்மை தவறக்கூடாது.**

### 72. உன்னை அழிக்க விரும்புபவன் தரும் பெரிய பரிசை மறுத்துவிடு.

உன் சொத்தைப்போல 10 மடங்கு சொத்தை வலிய உனக்குத்தர அன்புடன் ஒருவர் கூறுவதை எப்படி மறுக்க முடியும்?

உனக்கு வரஇருக்கும் உலகப்புகழை அச்சொத்து அழிக்கும்என்று தெரிந்தால் அதைப்பெறலாமா? பெற முடியுமா?

அதை ஏற்க மறுக்கும் எண்ணம் அருள்.

வாழ்க்கையில் இதை மனிதன் தெரிந்து செய்வது குறைவு.

தானே நடப்பதைத் தலைவிதிஎனக் கொள்கிறான்.

தகுதிக்கு மேல் வரும் பரிசை, அதிர்ஷ்டம்என ஏற்பது வழக்கம்.



பெறும்பொழுது மனத்தைச் சோதனை செய்தால் பின்னால் வரப்போகும் பெரிய நஷ்டத்தை மனம் தன்உணர்ச்சியால் வெல்லும்.

**அதேபோல் அன்னையிடமிருந்து வருவதைப் பெரும்பாலோர் அடக்கமாக மறுத்துவிடுவர். அதை ஏற்பது ஆத்ம விளக்கம் தரும்.**

மனிதன் மறுக்க வேண்டியதை ஏற்பான்; ஏற்க வேண்டியதை மறுப்பான்.

பிரதம மந்திரி பதவி, முதலமைச்சர் பதவி சிறிய மனிதர்களை அழித்தது உண்டு. பாரம் தாங்கும் பர்சனாலிட்டி வேண்டும்.

வாழ்வில் இப்படி எவரும் நடப்பார்என எதிர்பார்க்க முடியாது.

தகப்பனார் மத்திய மந்திரியாக இருந்தவர். மகன் முனிசிபல் சேர்மனாக ஆசைப்பட்டு, பிரம்மப்பிரயத்தனப்பட்டு ஜெயித்தான். கவுன்சில் நடைமுறையில் அவனுக்குக் கேவலமான திட்டு கிடைத்தது. ராஜினாமா செய்தான்.

கொடுத்தால் பெறக்கூடாததை இந்த அப்பாவி தேடிக் கண்டுபிடித்து எதிர்காலத்தை நாசம் செய்து கொண்டான்.

இந்தநிலைமை இலட்சியவாதிக்கு வருவதற்கும், சாமான்யனுக்கு வருவதற்கும், ஆத்ம விளக்கம் பெற்றவனுக்கு வருவதற்கும் உள்ள வித்தியாசங்களைப் பார்த்துப் புரிந்துகொள்ளுதல் பலன் தரும்.

ஒரு படி உயர வாழ்நாள் முழுவதும் காத்திருக்கவேண்டிய உயர்வை 6 படி உயர்த்தித் தேடிவந்து வாழ்வு தருகிறது. அது இலட்சியவாதியின் நிலை.

சாமான்யனுக்கு 100 மடங்கு சொத்தாக வருகிறது.

இறைவனே சாவித்திரிக்கு அதுபோன்ற பெரிய பரிசை சொர்க்கலோக வாழ்வாக அளித்தார். அவள் மறுத்துவிட்டாள்.

இது எல்லோருக்கும் நடப்பதில்லை.

அடுத்த லோக அற்புதம் ஆண்டவனால் அனுமதிக்கப்பட்டபின், வாழ்வு அப்படிப்பட்டவர்க்கு இதை அளிக்கும்.

சிறியவர், பெரியவர், நல்லவர், கெட்டவர், அனைவருக்கும் சட்டம் ஒன்றே.

## 73. ஒரு குறையை அடிபட்டவர் திருப்திப்படும் அளவுக்கு அகற்று.

ஒரு குறை நமக்குக் குறையெனத் தெரிய அக்காரியம் கெட்ட பிறகே தெரியவரும். பிரமோஷன் தகுதியுள்ளவரை விலக்கி, தகுதியற்றவருக்குக் கொடுத்தது மனத்தில் படாது. காரியம் கெட்டுப்போய், தகுதியற்றவன் நிலை தடுமாறும்பொழுதுதான் அது தெரியும். ஒரு பையனைத்தான் படிக்கவைக்க முடியும்என்றால், படிப்பு வரும் பையனை விட்டு, நமக்கு வேண்டிய பையனைக் காலேஜில் சேர்த்து, அவன் முடிக்காமல் வந்தபின்தான் தவறு தெரியும். அப்பொழுதும் அது தெரியாதவருண்டு. அவனுக்குத் திசை சரியில்லை, இல்லாவிட்டால் டிகிரியுடன் வந்திருப்பான் என்பார்கள். புத்திசாலிப் பையனைப் படிக்க வைக்கவில்லை. அவன் சர்க்காரில் குமாஸ்தாவாக இருக்கிறான். படிக்க வைத்தவனுக்குப் படிப்பு வரவில்லை. வருடம் 4 போயிற்று. இந்த நிலையில் குறையை ஒருவர் உணர்ந்தால், செய்வதற்கு ஒன்றில்லை. அடிபட்ட மகனுக்கு, ‘இப்பொழுதாவது என்னைத் தகப்பனார் நினைக்கிறாரே’ என்று ஆறுதல் வரும்.

**அன்பர்கட்கு முழுநிலைமையும் சீரடையும்; சற்று உபரியும் வரும்.**

அதற்குரிய முக்கிய நிபந்தனை: தவற்றை மனம் உணர வேண்டும். தவற்றைச் செய்தவர் உணர்ந்தால் நஷ்டப்பட்டவருக்கு ஆறுதல் வரும். நஷ்டப்பட்டவர் மனம் திருப்திப்படும் அளவு தவறு செய்தவர் உணருவது - சொல்லை விலக்கி, செயலையும் விலக்கி, மனத்தால் மாறினால் - sincerity உண்மை. அந்த உண்மை பூரணம் பெறும்வரை மனம் அமைதியாக இருக்கும். பலன் வாராது. பூரணமான அதே நேரம் நிலைமை மாறும். சர்க்காரில் குமாஸ்தாவாக வேலை செய்பவனுக்கு special selection புதுச் சட்டப்படி டிகிரி எடுத்திருந்தாலும் எது கிடைக்காதோ அந்த வேலை தேடிவரும். இது தவறாது நடக்கும். ஆசிரியராக ஓய்வு பெற்றவர்க்கு பாங்க் ஏஜெண்ட் வேலை தேடிவந்தது. முதல் வருஷம் கல்லூரிப் பரீட்சையில் பெயிலானவர் டெபுடி கலெக்டர் ஆனார். அவை வாழ்வில் நடந்தவை. அன்னையிடம் அன்னை முத்திரையுடன் நடப்பவை நடந்தபின்னும் நம்ப முடியாது.

- ❀ குறையைக் குறையாக உணர்வது reversal தலைகீழ் மாற்றம்.
- ❀ அறிவு மனநிம்மதி தரும்.



- ❀ உணர்வு சூழலை மாற்றும்.
- ❀ அடிபட்டவர் மனம் திருப்திப்படுவது சூழல் நிலைமையை மாற்றும் அளவுக்குத் திறன் பெறும்.
- ❀ மனம் மாறும் நேரமும், நிலைமை மாறும் நேரமும் ஒன்றாக இருக்கும்.
- ❀ தெரியாமல் செய்த தவற்றால் ஏற்பட்ட குறை ஒன்று.
- ❀ வேண்டுமென்றே செய்த தவற்றால் ஏற்பட்டது வேறு குறை.
- ❀ மனமாற்றம் செயலுக்குத் தகுந்தாற்போலிருக்க வேண்டும்.
- ❀ அப்படி மாறும் நேரம் அற்புதம் நிகழும் தருணம்.
- ❀ மனத்தின் ஆழ்ந்த உணர்வு, சூழலில் செயலை மாற்றும் திறனுடையது.
- ❀ அவை சந்திக்குமிடம் சூட்சும வாழ்வு.

## 74. அழிச்சாட்டியத்தை ஆதரிக்க வேண்டும்.

இந்த முறை வாழ்க்கைக்குரியதன்று. வாழ்வைக் கடந்தது. இவை வாழ்வில் வரக்கூடாது. வந்தால் அதற்கு முடிவில்லை. அதற்கும் அன்னையிடம் முடிவுண்டு என்பது இம்முறை.

தமிழ்நாட்டிலேயே முதன்மையான செல்வர் 1960இல் “நான் எதுவும் சம்பாதிக்கவில்லை. தகப்பனார் கொடுத்ததைக் காப்பாற்றினேன்” என்றார். அவர் மகன் உலகில் ஒரு பெருநகரம் தவறாமல் ரேஸ் நடத்துகிறான்.

50ஆம் வயதில் 6 பிள்ளைகளை விட்டுவிட்டு 3 பிள்ளைகள் உள்ள பெரிய மனிதன் மனைவியைத் திருமணம் செய்து பகிரங்கமாக வாழ்கிறார் ஒருவர்.

பெரிய முழுச் சொத்தையும் அதிவிரைவில் அழித்து ஆனந்தப்படுகிறான் ஒரு சிறுவன்.

எந்த எந்தக் குற்றங்களைச் செய்யக்கூடாதோ, அத்தனையும் கணவர் ஒன்றுவிடாமல் செய்து பெருமைப்படுகிறார்.

இதுபோன்ற செய்திகளை 50 ஆண்டில் ஒன்று கேள்விப்படுகிறோம். அவற்றைத் தீர்க்க முடியாது.

அவர் செயல் அருணகிரிநாதர் செயல் போன்றது.

இப்படிப்பட்ட சிக்கலில் உள்ளவர் அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவர்மூலம் பிரச்சினையைத் தீர்க்க முன்வந்தால் முதற்காரியமாக 'நமக்கு இது தவறு. ஆண்டவனுக்கு இது தவறில்லை' என்பதைப் புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின் அவர் செய்வதை மனதாலும் வெறுக்காமல், ஏற்று ஆதரிக்க வேண்டும். அதே நிமிஷம் மனம் மாறும், நிலைமை மாறும், அனைத்தும் மாறும். என்அனுபவத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் பல எழுந்துள்ளன. அவை எனதுவாழ்வுக்குள் ஏற்பட்டவையல்ல. என் பார்வையில், பொறுப்புக்கு வெளியில் எழுந்தவை. ஒரு விஷயத்தில் நான் அதை ஏற்று மனதால் ஆமோதித்துக் கடிதம் எழுதினேன். பதிலுக்கு வாழ்க்கையை தலைகீழே மாற்றி, வாழ்வின் பாதைக்குள் வந்துவிட்டதாகச் செய்தி வந்தது. நான் ஏற்றவை அத்தனையும் சிறிது காலம் அல்லது நீண்ட நாளில் மாறிவிட்டன. பிறருக்குக் கொடுமை செய்வதையே ஆனந்த அனுபவமானவர் உறவை - தேவையில்லாததை - யோகப்பயிற்சியாக ஏற்றேன். பலன் உடனே தெரிந்தாலும், முழுப்பலன் எழ 14 வருஷமாயிற்று. அவர் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் உலகம் வியக்கத்தக்க மாற்றம்.

- ❀ இதையும் கடந்த பொய்யின் இருள் உண்டு.
- ❀ அதை mean, perverse, falsehood கயமையான குதர்க்கத்தின் இருண்ட பொய் எனலாம்.
- ❀ அவை வாழ்வில் வருவதில்லை. யோகத்தில் ஒரு கட்டத்தில் வரும்.
- ❀ அவர்கள் தங்களை அறிவார்கள். பிறரைப் பொறி வைத்துப் பிடித்து கொடுமைப்படுத்துவார்கள். அவர்களை மாற்றுவது யார் கடமையும் இல்லை. அவர் பிடியில் சிக்கியவர் விடுதலை பெறும் வழி அவரை மனம் ஆமோதித்து ஏற்பது.
- ❀ **அநியாயம் ஆண்டவன் நியாயம் என்பது இச்சட்டம்**.

*தொடரும்....*

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# அருள் செயல்படும் வகை

மனிதனுக்குப் பிடிக்காதவற்றுள் தலையானது அருள். பொதுவாக மனிதன் அருளைவிட்டு விலகுவான். அருள் பொருட்படுத்தாது. போன ஜென்மத்தில் ரிஷியாக இருந்தவர், புண்ணியம் செய்தவர், தன் நல்ல குணத்தைத் தாமே அறியாதவரை அருள் தொடரும். மனிதன் முயன்று விலகுவான்; கோபப்படுவான்; அருள் தனக்குத் துரோகம் செய்கிறது என்பான். அவன் விலகும்பொழுது ஏதாவது ஒரு வகையில் அருள் தொடர்பை நீடிக்கும். அதையும் முயன்று துண்டிப்பாருண்டு.

**அன்பருடைய தொடர்பு அருள்**

என்பதை உறவும், நட்பும் அறியாது. அன்பரை உறவாக நடத்தி வம்பு செய்வார்கள். அப்படிப்பட்ட தொடர்பு ஒன்று, உறவு நெருக்கமாக இருந்த நாளில் அன்பருக்கு ஜாமீனாக ஒருவர் சொத்து வந்தது. அவ்விவகாரம் முடிந்தவுடன் சொத்திற்குரிய பத்திரம் உடையவருக்குப் போனால், அருள் தொடர்பு அறும். பத்திரம் கையிலிருந்திருந்தால், அச்சொத்து பல லட்சங்கட்கு, பல ஆண்டுகட்கு முன்பாக விற்கப்பட்டு இருக்கும். இன்று அதன் மதிப்பு பல கோடி. இது அருள் செயல்படும் வகை.

- ✡ **உறவு பத்திரம் மூலமாக வருவது physical relation கடைசி நிலை.**
- ✡ **உறவு உணர்வாக எழுவது உயர்ந்தது.**
- ✡ **மனம் உறவின் பொருளை அறிந்து ஏற்பது அதனினும் சிறந்தது.**
- ✡ **ஆன்மாவில் உறவுஎன்பது நன்றியறிதல்.**
- ✡ **நன்றியறிதல் இருப்பது உண்மையானால், பத்திரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒன்றே. இல்லாதபொழுது உள்ளுணர்வு உயர்வாக இருக்கும்.**

❀❀❀

# உப வருமானம்

கணவனும், மனைவியும் ஆபீஸ் வேலை செய்கின்றனர். கணவர் திறமைசாலி. ஒரு வேன் இருந்தால் வாடகை வருமானம் வரும்என, வேன் வாங்க முயன்றார். அதன் விலை 6 இலட்ச ரூபாய். பாங்க் 3 இலட்சம்வரை கொடுக்க முன்வருகிறது. பலனில்லை. இருவரும் கலந்து ஆலோசித்தனர். வழி புரியவில்லை. கொஞ்ச நாட்கள் கழித்து பெண் ஆபீஸில் Secretயைப் பற்றிப் பேச்சு நடந்தது. வீடு வாங்கப் பிரியப்பட்டவர் வீட்டைப் படமாக எழுதினார். பல ஆண்டு கழித்து அவர் வாங்கிய வீடு படத்தின் வீடாக அமைந்தது. 1 மில்லியன் டாலர் சம்பாதிக்க ஆசைப்பட்டவர் அதுபோல் ஓர் உபாயம் கைக்கொண்டார் என்றெல்லாம் பேசினார்கள். அதன் தத்துவம் “நாமும், பிரபஞ்சமும் ஒன்றே. நாம் அதனின்று பிரிந்து உள்ளோம். நமக்கு முடியாதது பிரபஞ்சத்திற்கு முடியும். அதைக் கேட்டால் தரும். அதற்குரிய உபாயம் உதவும்”.

“எனக்கு 6 இலட்சம் வேண்டும். பிரபஞ்சம் தருமா? தரும்எனில் என்ன உபாயம்?” எனக் கணவர் கேட்டார். ஒரு செக்கில் 6 இலட்சம் என எழுதி வைத்தார். ஒரு சில வாரம் கழித்து, இப்படிப்பட்ட அன்பர்கட்கு உதவும் ஸ்தாபனம் ஒன்றைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர்களை அணுகினார்.

**அவர்கள் 6 இலட்சம் தர இசைந்தனர்.**

❀❀❀

January 2008 Jiviyam 13 Malar 9
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடு

**கர்மயோகியின்**

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்**

*தமிழாக்கம்:* என். அசோகன் ரூ.100/-

**LECTURES ON SRI AUROBINDO'S THE LIFE DIVINE**

**Garry Jacobs** ரூ.150/-

**SATYA JYOTHI**

**(CONCISE TRUISMS)**

**N.Asokan** ரூ.200/-

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

*கிடைக்குமிடம்*

**பாண்டியில்**
**மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,**
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

**சென்னையில்**
**மாம்பலம் தியான மையம்,**
''சுந்தரம்'',
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191